...gistered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

...: 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 18 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஸபர் 28 (01.05.2003) வியாழக்கிழமை இதழ் : 210



ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து

SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.

ரா ம் கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — சீமேந்து — ரா ம் கோ

(சி-884)


## ...வதியை வல்லுறவுக்குட்படுத்திய ...ருவர் புலிகளிடம் ஒப்படைப்பு!



பூ.பரணிதரன் க.நாகராஜா

(யாழ்ப்பாணம்)

...ன்னாகம் பகுதியில் மனவ...ளர்ச்சிகுன்றிய இளம்பெண்ணை ...யில் வல்லுறவுக்குட்படுத்திய இருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் இருவரும் நேற்று செய்தியாளர்கள் முன்நிறுத்தப்பட்டு, விடுதலைப் புலிகளால் வாக்கு மூலம் பெறப்பட்டது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

கடந்த 24 ஆம் திகதி சுன்னாகம் பகுதியில் வான் ஒன்றில் சென்ற மேற்படி இருவரும், வீதியில் வந்த மனவளர்ச்சி குன்றிய 21 வயதான இளம்பெண்ணை அழைத்துச் சென்று மறைவான இடத்தில் வல்லுறவுக்கு உள்ளாக்கியபின், அவர் அணிந்திருந்த காப்பினையும் அபகரித்தனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புபட்ட வாகனச் சாரதியான க.நாகராஜா (வயது 41), பூ.பரணிதரன் (வயது 26) ஆகிய இருவரையும் பொதுமக்கள் விசாரிக்க முற்பட்டபோது, அவர்கள் பொதுமக்களைத் தாக்கிவிட்டு தப்பியோடமுயற்சித்தனர். எனினும், பொதுமக்கள் இவர்களை மடக்கிப்பிடித்து நையப்புடைத்த பின்னர் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே, ஜப்பான் பிரதிநிதிகள் இந்தியாவில் மந்திராலோசனை

### மிலிந்தவும் இன்று இந்தியா விரைவு

(கொழும்பு)

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹாவுடன் முக்கிய சந்திப்பொன்றை நடத்துவதற்கு அமைச்சர் மிலிந்த மொறகொட இன்று இந்தியா செல்கிறார். விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை தற்காலிகமாக இடைநிறுத்தியதற்குப் பின்னரே இந்த விஜயம் இடம்பெறுகிறது.

இதேவேளை, இவ்வார இறுதியில் புதுடெல்கி வரும் ஜப்பானின் விசேட தூதுவர் யசுசி அகாஷி மற்றும் நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை சிபார்சின்படியே படைமுகாம் மாற்றப்படுகிறதாம்!

(கொழும்பு)

இராணுவத்தினரதும், அமைச்சரவையினரதும் பரிந்துரைகளுக்கு ஏற்பவே, யாழ்.நகர் மத்தியில் இருக்கும் ஞானம்ஸ், சுபாஸ் ஹோட்டேல் இராணுவ முகாம்கள் அப்புறப்படுத்துவதாக அமைச்சர் ஜி.எல். பீரிஸ் நேற்று கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இராணுவத் தளபதிகளான மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, லொஹான் குணவர்த்தன ஆகியோரது

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அனைத்துத் தரப்பினரும் ...மே தினத்தில் ஒன்றிணைவு!

## வர்த்தக நிலையங்கள் மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவுள்ள மே தின நிகழ்வில் சகல பொதுமக்களையும் கலந்துகொண்டு, தமது பங்களிப்பினை வழங்கும்படியும், சகல வர்த்தகர்களும் - தமது வர்த்தக நிறுவனங்களையும், கல்வி நிலைய அதிகாரிகள் - கல்வி நிலையங்களையும் பூட்டி, தமக்கு ஆதரவு வழங்குமாறு மே தின ஏற்பாட்டுக்குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## ...த்திய கல்லூரி மைதானத்தில் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இன்று அரசியற்கட்சிகளும், மக்கள் அமைப்புகளும் ஒன்றிணைந்து ...த்தும் மாபெரும் மே தினப் பேரணியைத் தொடர்ந்து, பொதுக்கூட்டம் ...ழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இம்மாபெரும் மே தின நிகழ்வில் அரசியற் கட்சிகளுடன், தொழிற் சங்கங்...், பொது அமைப்புக்கள் என்பன பங்கேற்பதுடன் யாழ்.குடாநாட்டின் ...ல பகுதிகளிலிருந்தும் கடற்றொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், ...சிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், கூட்டுறவாளர்கள், தனியார் துறை ...ர் எனப் பல தரப்பினரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

...தினப் பேரணியானது, மத்திய கல்லூரி மைதானத்தைச் ... உறுப்பினர்களான மாவை சேனாதி...

## உலகவங்கி பிரதிநிதி ஹரோல்ட் தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார்!

### வெஸ்பேர்க், புதிய நோர்வே தூதுவரும் பங்கேற்பு



# த்திய கல்லூரி மைதானத்தில் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

**இன்று அரசியற்கட்சிகளும், மக்கள் அமைப்புகளும் ஒன்றிணைந்து ாத்தும் மாபெரும் மே தினப் பேரணியைத் தொடர்ந்து, பொதுக்கூட்டம் ழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.**

**இம்மாபெரும் மே தின நிகழ்வில் அரசியற் கட்சிகளுடன், தொழிற் சங்கங் ர், பொது அமைப்புக்கள் என்பன பங்கேற்பதுடன் யாழ்.குடாநாட்டின் ல பகுதிகளிலிருந்தும் கடற்தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், ,சிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், கூட்டுறவாளர்கள், தனியார் துறை ர் எனப் பல தரப்பினரும் கலந்துகொள்ளவுள்ளனர்.**

மே தினப் பேரணியானது, ம் 2 மணிக்கு நல்லூரில் மைந்துள்ள தியாகி திலீபனின் னவாக அமைக்கப்பட்ட தூபி ர் முன்றலில் ஆரம்பமாகி, டர்ந்து பருத்தித்துறை வீதியூ ஆஸ்பத்திரி வீதியையடைந்து, க்கூட்டு வீதியூடாக யாழ். மத்திய கல்லூரி மைதானத்தைச் சென்றடையும். அங்கு மாபெரும் மே தினக் கூட்டம் நடைபெறும்.

இம் மே தினக் கூட்டத்தில் - முக கிய பிரமுகர்களாக விடுதலைப் புலி களின் யாழ்.மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதி ராஜா, அ.விநாயகமூர்த்தி, ரெலோ முதல்வர் என்.ஸ்ரீகாந்தா, ஈ.பி.ஆர். எல்.எப். செயலாளர் சுரேஷ் பிரே மச்சந்திரன் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ள னர்.

மே தினப் பேரணியிலும் கூட் டத்திலும் மக்கள் கலந்துகொள்ள வசதியாக சகல பகுதிகளிலிருந்தும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மாந்தர சைக்கிள் ஓட்டம்; பாலிஸார் நடவடிக்கை!

## சைக்கிள்கள் பறிமுதல், 200 ரூபா தண்டம்

யாழ்ப்பாணத்தின் பல பகுதி களிலும்- போக்குவரத்து விதிமுறை களை மீறி, சமாந்தரமாகப் பயணம் செய்தவர்களது துவிச்சக்கர வண் டிகளை, போக்குவரத்துப் பொலிஸார் தடுத்துநிறுத்தியதோடு, துவிச்சக்கர வண்டிகளையும் பறிமுதல் செய்தனர்.

நூற்றுக்கணக்கில் பறிமுதல் செய்யப்பட்ட துவிச்சக்கரவண்டிகள் அனைத்தும் யாழ். பொலிஸ் நிலை யத்திற்குக் கொண்டுவரப்பட்டன.

போக்குவரத்து விதிமுறைகளை அவதானிப்பதற்காக பெருமளவு பொலிஸார் சகல சந்திகளிலும் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இதேவேளை - துவிச்சக்கரவண் டிகளை பறிகொடுத்த நூற்றுக்கணக் கான பொதுமக்கள் நேற்று பொலிஸ் நிலையத்தில் கூடிநின்றனர்.

இந்த துவிச்சக்கர வண்டிகள் யாவும் நீதிமன்றத்தில் ஒப்படைக் கப்பட்டவேளை, ஒவ்வொரு துவிச் சக்கரவண்டிக்கும் 200 ரூபா குற்றப் பணமாக அறவிடப்பட்டது. (சு)

### விண்ணாணம் விநாசியர்



இனிச் சேட்ட விடுகிறவர் பாடுகள் அரோகராதான்.

# உலகவங்கி பிரதிநிதி ஹரோல்ட் தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார்!

## வெஸ்போர்க், புதிய நோர்வே தூதுவரும் பங்கேற்பு



பீற்றர் ஹரோல்டை, தமிழ்ச்செல்வன் கைலாகு கொடுத்து வரவேற்கிறார்.

(கிளிநொச்சி)

உடனடி மனிதாபிமான புனர் வாழ்வுப் பணிகளுக்கான உபகுழு வுக்கான (சிறான்) சர்வதேச நிதி யம் அமைப்பது குறித்து, நேற்று கிளிநொச்சியில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகவிருந்தபோதும், அது நடைபெறவில்லை.

எனினும், இந்த ஒப்பந்தம் விடு தலைப் புலிகள் - நோர்வே அரசு- இலங்கை அரசு ஆகிய முத்தரப்பினர் களையும் உள்ளடக்கியதாக விரை வில் கைச்சாத்திடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உலக வங்கியின் இலங்கை வதிவிடப் பிரதிநிதியும், இலங்கைக் கான புதிய நோர்வேத் தூதுவரும், முன்னாள் நோர்வேத் தூதுவர் வெஸ்போர்க்கும் நேற்று தமிழீழ விடு தலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

நேற்றுக் காலை 11 மணியள வில் விமானப்படைக்குச் சொந்த மான உலங்கு வானூர்தியில் கிளி நொச்சி மத்திய மைதானத்தை வந்த டைந்த - உலக வங்கியின் இலங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

021 - 2223916, 0777 - 517019

01-505632, 074-612656, 01-390128

(சி-881)

# தமிழினத்தின் ஒற்றுமை கண்டு சிங்களதேசம் வியந்து நிற்கிறது!

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் மே தினச் செய்தி

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய இனத்திற்கு எதிரான இன ஒடுக்கல், இன அழிப்பு நடவடிக்கைகள் 1958, 1977, 1983 இல் மேற்கொள்ளப்பட்டன. ஆயுதப் போராட்டம் 1983 ஆம் ஆண்டிற்குப்பின்னர் தீவிரப்படுத்தப்பட்டு, இன்று பெரும் தமிழ்ச்சேனையாக, மிகப்பெரிய பலத்துடன் தமிழ்த் தேசத்தின் படையாக எழுந்துநிற்கின்ற காரணத்தினால் சிங்கள அரசு பேச்சுவார்த்தைக்கு முன்வந்திருக்கின்றது.

தமிழ்த் தேசிய இனத்தின் தலைவர் மேதகு பிரபாகரனின் தலைமையில், தமிழ்த் தேசிய இனம் ஒன்றுபட்டுள்ள சூழ்நிலையில், ஒற்றுமையை மேலும் பலப்படுத்துவதன் மூலமே தமிழ்த் தொழிலாளர்கள் தங்களது உரிமைகளை வென்றெடுக்கமுடியுமென - மே தினத்தை முன்னிட்டு சிவாஜிலிங்கம் எம்.பி. விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

தமிழ்த் தேசிய இனத்தின் ஒற்றுமை கண்டு சிங்கள அரசும், சர்வதேச சமூகமும் இன்றைக்கு வியந்து நிற்கின்றது. தமிழர் சேனையின் பலத்தைப் பேணிப் பாதுகாப்பதன் மூலம்தான், தமிழ்த் தேசிய இனத்தின் வெற்றி தங்கியுள்ளது.

ஒரு தேசிய இனம், தனது தலைவிதியைத் தானே நிர்ணயிப்பது என்ற பிறப்புரிமையின் அடிப்படையில் பாரம்பரிய வாழ்விடமான தமிழீழத் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் - தன்னாட்சியைக் கோரிநிற்கின்றது தமிழினம். இந்த உள்ளக சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளச் சிங்களதேசம் மறுக்குமாக இருந்தால், இருந்ததை - இழந்ததை மீட்டு, சுதந்திரத் தமிழீழ அரசை நிறுவுவதைத்தவிர வேறு வழியில்லை என்பதனை சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்ட நாம் அணைவரும் ஒன்றுபடுவோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் தமிழர்தேசத்தில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த போதிய நடவடிக்கைகளை எடுக்க சிங்கள அரசு தவறிவிட்டது.

எமது தமிழ்த் தேசிய இனத்தின் உணர்வலைகளையும் உள்ளக் குமுறல்களையும் சிங்கள அரசுக்கும், சர்வதேசத்துக்கும் எடுத்துக் காட்டுவதற்காக ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு தமிழ்த் தேசிய இனத்தின் கூட்டு மே தினப் பேரணியிலும், பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்டு தமிழ்த் தேசிய இனத்தின் உறுதிப்பாட்டை அகில உலகிற்கும் எடுத்துக்காட்ட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார் சிவாஜிலிங்கம்.

### புத்தூரில் புதிய மின்மாற்றி

புத்தூர்ச் சந்தியில் புதிய மின்மாற்றி ஒன்றைப் பொருத்தும் பணி, தற்போது இடம்பெற்றுவருகிறது. இதற்கான பணிகளில் மின்சாரசபை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த மின்மாற்றியின் மூலம் புத்தூர் கிழக்கு, புத்தூர் மேற்குப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப் படவுள்ளதாகவும் மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.




# ஒல்லாந்தர் கால கட்டடத்தில் இயங்கும் நெடுந்தீவு உதவிஅரச அதிபர் பணிமனை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவின் ஆறு கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியதாக தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவாக உள்ளபோதிலும் -

நிர்வாகப் பணிமனைக்கு பல வருடங்களாக நிரந்தர உதவி அரசாங்க அதிபர் எவரும் நியமிக்கப் படவில்லை.

பதவிநிலை உத்தியோகத்தர்கள்கூட இல்லாத நிலையில் இங்கு நிர்வாகம் நடாத்தப்பட்டு வருகின்றது.

அத்துடன், உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் சீரான தொலைபேசி வசதியும் இல்லை. கணக்கு நடைமுறைகள் மற்றும் ஆவணங்களை ஆவணப்படுத்தி வைக்க கணினி வசதிகளும் இல்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் பணிமனை, ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்ட கட்டடம் ஒன்றிலேயே இயங்கி வருகின்றது. ஏனைய இடங்களில் நவீன வசதிகளுடன் கூடிய பணிமனைகள் கட்டப்பட்டுள்ள போதும், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை - எந்த வித வசதிகளோ, போதிய ஆளணி வசதிகளோ இன்றியும் செயற்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# அனைத்து மக்களும் ஓரணியாகத் திரள்வோம்

## ஐக்கிய சோசலிஸக் கட்சி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

அன்று அமெரிக்காவின் சிக்காகோ நகரில் உழைக்கும் வர்க்கம் தன்னுரிமைக்காகப் போராடியது, உதிரம் சிந்தியது, தளையறுத்து தலைநிமிர்ந்தது. அன்று முதல் மே தினம் என்பது மேதினியில் மேன்மை பெற்றது.

இன்று மே நாளில் உழைக்கும் வர்க்கமும், அடக்கப்படும் இனங்களும், ஒடுக்கப்படும் மக்களும் கூட்டிணைந்து தம் உரிமைக்குரலை உலகறியச்செய்வது காலத்தின் கட்டாயமாகிவிட்டது - என ஐக்கிய சோசலிஸச் கட்சி விடுத்துள்ள மே தினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

அதில் மேலும், சுதந்திரத்துக்காகப்போராடும் தமிழீழ தேசத்தின் அனைத்து மக்களும், அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு ஓரணியாகத்திரண்டு, அடக்கியாள்வோருக்கும் அவர்களின் சர்வதேச கூட்டாளிகளுக்கும் உரத்த குரலில் தமது விருப்பத்தை வெளிப்படுத்த வேண்டும்.

இன்றைய தமிழ்த் தேசிய ஐக்கிய மே நாள் ஊர்வலத்திலும் கூட்டத்திலும் கலந்துகொள்வதை ஒவ்வொரு தமிழரும் தமது தேசியக் கடமையாகக் கொள்ளவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 15 வருடங்களாக புனரமைக்கப்படாத வீதி

(மானிப்பாய்)

வடமராட்சி, ஊரிக்காடு - நாவலடி வீதி, கடந்த 15 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமலிருப்பதைச் சுட்டிக்காட்டி, அவ்வூர் மக்களால் கையெழுத்திடப்பட்ட மகஜர் ஒன்று யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபையின் கீழ் மேற்படி வீதி பதிவுசெய்யப்பட்ட இவ்வீதி, கடந்த 15 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாது கவனிப்பாரற்றுக் கைவிடப்பட்டதால் கற்குழிகளாகக் காட்சியளிக்கின்றது. (100)

### தாயின் பெயரையும் இணைக்க சட்டம்

தமிழகத்தில் இனிமேல் பிறக்கும் குழந்தைகளின் பெயர்களுக்கு முன்னால் - தாயின் பெயரை முதலிலும், பின்னர் தந்தையின் பெயரையும் இடுவதற்கு - தமிழக அரசாங்கம் திட்டமிட்டு வருவதாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்தார்.

தமிழக சட்டசபையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

### விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் சென்ற ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர், லொறி ஒன்றுடன் மோதி படுகாயமடைந்த நிலையில் - யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம், நீர்வேலியில் இடம்பெற்ற இந்த விபத்தில் எல். ரவி (வயது 32) என்பவரே படுகாயமடைந்தவராவார். (ரா,சு,110)

# படைத்தள இடமாற்ற முடிவு நல்லெண்ண நடவடிக்கையாம்!

## அரச வட்டாரங்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர மத்தியிலுள்ள படைத் தளத்தைக் கோட்டைப் பகுதிக்கு இடமாற்றம் செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளமை ஒரு நல்லெண்ண நடவடிக்கையென்று அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்காலிகமாகச் சமாதானப் பேச்சுக்களிலிருந்து விலகிக்கொள்வதாக விடுதலைப்புலிகள் அறிவித்ததன் பின்னணியிலேயே அவர்களுக்கு நல்லெண்ண சமிக்ஞையை வெளியிடுவதற்காக, யாழ். நகரப் படைத் தளத்தை இடமாற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் 29 - 03 - 1933



விண்ணில் 01 - 04 - 2003

அமரர் மார்க்கண்டு துரைராஜா
(எழுதுவினைஞர், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்)

கடந்த 01.04.2003 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் சபீண்டிகரணக் கிரியைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் எதிர்வரும் (01.05.2003) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் குடும்ப சமேதராய் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
(சி/885)

சின்னஞ்சிறு விளம்பரம்

மணமகள் தேவை

உயர் குல குடும்பத்தைச் சேர்ந்த, 40 வயதுடைய, கனடா பிரஜாவுரிமையுடைய தற்போது யாழ். வந்துள்ள 5'11", ரேவதி நட்சத்திரம். பொறியியலாளர் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. படத்துடன் தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி:- 071-383185, குமார், 402/1, பிரதான வீதி, சுண்டுக்குளி. (பஸ்ரியன் அச்சகத்திற்கு அருகில்) (332)

ராஜா யாழ்ப்பாணம்.
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன், ரோஜா, வடிவேல் நடித்த
அரசு
10.30, 2.30, 6.30, 9.30
CROUCHING TIGER HIDDEN DRAGON
இரவு 9.30 இற்கு மட்டும்
(சி-883)

நிறஞ்சனாஸ் சங்கானை
விஜய், ரம்பா நடித்த
என்றென்றும் காதல்
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு (இரவு 8.45)
CHINA STRIKE FORCE
(சி-882)

# இன்றைய நாள் இனிய நாள்

**01-05-2003 - வியாழக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- பிரயாணம், நற்கீர்த்தி, பணவரவு, வயிற்றில் ரோகம், ஆயுதபீடை. |
| இடபம் | :- தார புத்திர விரோதம், வீண்பழிகேட்டல், நேத்திரரோகம், சிநேக நன்மை. |
| மிதுனம் | :- ஆரோக்கியம், சத்துரு பீடை, பிரயாணக் கஷ்டம், அதிக பிரயாசம், பொருட்பேறு. |
| கர்க்கடகம் | :- தொழில் குறைவு, தேகசுகக் குறைவு, புத்திர நன்மை, காரிய திறமை. |
| சிங்கம் | :- வயிறு, மார்பில் வலி, வாக்குக்கலகம், சத்துரு பீடை, சிநேகிதரால் கவலை. |
| கன்னி | :- புதிய ஸ்தானம், பலவித செலவுகள், பணக்குறைவு, சௌபாக்கியம். |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- பிரயாசை மிகுதி, பிரயாணம், சிநேக லாபம், குடும்பானுகூலம், காரிய திறமை. |
| விருச்சிகம் | :- பொருட்செலவு, தாரசுகத் தடை, அதிகார சித்தி, இனசன கொண்டாட்டம். |
| தனு | :- சமாதான வாழ்வு, சரீரத்தில் வியாதி, மனமகிழ்ச்சி, குடும்ப மகிழ்ச்சி. |
| மகரம் | :- சௌபாக்கியம், தொழில் விருத்தி, நற்கீர்த்தி, தனதானிய லாபம், பிரயாண கவலை. |
| கும்பம் | :- விஷ பயம், சரீரசுகக் குறைவு, தருமகாரிய சித்தி, இனசன கவலை, பெரியோர் மதிப்பு. |
| மீனம் | :- பணவரவு, சத்துருவெற்றி, களஸ்திர சுகம், நற்குண விருத்தி, வீண்பயம். |

## போட்டியில் அதிரடிப்படை தோல்வி ஆத்திரத்தில் மக்கள் மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடியில் இடம்பெற்ற கயிறிழுப்புப் போட்டியொன்றில், விசேட அதிரடிப் படையினர் தோல்வியுற்றதால், ஆத்திரமடைந்த அவர்கள் பொதுமக்களைத் தாக்கினர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில், இரண்டு பொதுமக்கள் காயமடைந்தனர்.

விளையாட்டு விழாவென்றில் இடம்பெற்ற கயிறிழுப்புப் போட்டியில் விசேட அதிரடிப்படையினரும், பொதுமக்களும் பங்குபற்றியிருந்தனர். இதில் விசேட அதிரடிப்படையினர் தோல்வியடைந்ததையடுத்து, ஆத்திரமடைந்த அவர்கள் பொதுமக்களைத் தாக்கினர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து களுவாஞ்சிக்குடியில் திங்களன்று கடைகள் பூட்டப்பட்டுக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

## முதலில் யுத்த சபையை உருவாக்கினால் தற்கொலைப் படையை நாம் தருவோம்!

### சுருதி குறைகின்றது சிஹல உறுமய அறிவிப்பில்

(கொழும்பு)

நாட்டில் யுத்தத்தைப் பிரகடனப்படுத்தி யுத்தசபையை உருவாக்கினால், தாம் தற்கொலைப் படையொன்றை உருவாக்கித் தர முடியும் என்று சிஹல உறுமய அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்டபோதே சிஹல உறுமயவின் அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கம் முதலில் யுத்தநிலையைப் பிரகடனம் செய்யவேண்டும். அந்த யுத்தத்துக்கு இராணுவ அதிகாரிகளைக் கொண்ட யுத்தசபை ஒன்று தலைமை வகிக்கவேண்டும்.

இவ்வாறானநிலை ஏற்படுத்தப்படுமானால், சிஹல உறுமய தற்கொலைப்படையொன்றை உருவாக்கி, அதனை யுத்தசபையிடம் ஒப்படைக்கத் தயாராகவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட போன்ற தேசத்துரோகிகள் அடங்கிய கூட்டத்தை நாட்டை விட்டு விரட்டவேண்டும்.

எமது தற்கொலைப் படை புலிகளின் தலைவர்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடாத்தும். இதன் மூலம், இராணுவத்தினரின் போரிடும் மனோநிலை அதிகரிக்கப்படும். படையினரின் மனோபலத்தை பெருக்குவதற்கும் எம்மால் முடியும் என்றும் சிஹல உறுமயவின் அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

முன்னதாகக் கடந்த திங்கட்கிழமை தாம் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை மேற்கொள்வதற்கெனத் தற்கொலைப்படையை உருவாக்கப்போவதாக அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### கொழும்புத் துறைமுகத்தில் சார்ஸ் நோய் அச்சுறுத்தல்

## தொற்று அபாய நாடுகளிலிருந்து வரும் கப்பல் சிப்பந்திகள் தரையிறங்கத் தடை!

(கொழும்பு)

இலங்கையிலுள்ள எந்தவொரு துறைமுகத்திலும் - சார்ஸ் நோய் தொற்றியுள்ள நாடுகளிலிருந்து வரும் கப்பல் சிப்பந்திகளை இறங்க அனுமதிப்பதில்லை என்று துறைமுக அபிவிருத்தி அதிகாரசபை முடிவு செய்துள்ளது.

சார்ஸ் தொற்றுக்கு இலக்கான சிப்பந்திகளுடன் ஏதாவது கப்பல் வருவதாகத் தமக்குத் தகவல் கிடைத்தால், அது தொடர்பாகக் குறிப்பிட்ட கப்பல் முகவருடன் தொடர்பு கொணடு, அக்கப்பலை இலங்கைத் துறைமுகங்களுக்குள் நுழையாமல் தடுப்பது பற்றியும் ஆராயப்பட்டிருப்பதாகத் துறைமுக அதிகாரசபையைச் சேர்ந்த அத்துல ஹரகந்த லியனகே தெரிவித்தார்.

சார்ஸ் நோய் நாட்டுக்குள் பரவுவதைத் தடுப்பதற்கு ஏற்ற முன்னெச்சரிக்கையாகவே, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களில் இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை- கட்டுநாயக்க விமான நிலையமூடாக வரும் வெளிநாட்டவர்களைப் பரிசோதிப்பதற்காக 18 இலட்சம் ரூபா செலவில் வெப்ப உணர்கருவிகள் இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

அத்துடன், விமான நிலையங்களில் பணிபுரிவோர் மற்றும் சந்தேகத்துக்கிடமான நோயாளிகளைப் பரிசோதிப்போருக்கு முகமூடிகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

இதேவேளை, உலக சுகாதார நிறுவனத்தின் ஏப்ரல் 26 ஆம் திகதிய கணிப்பீட்டின்படி, உலகின் 28 நாடுகளில் சார்ஸ் நோயினால் 4800 பேர் பீடிக்கப்பட்டனர். இவர்களில் 2239 பேர் குணமடைந்துவிட்டனர்.

சார்ஸ் நோயினால் 299 பேர் மரணமாகியிருப்பது ஊர்ஜிதமாகியுள்ளது. இதேவேளை, இந்தியாவிலும் ஏழுபேர் சார்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

அத்துடன், பல்வேறு நாடுகளில் சார்ஸ் தொற்றுநோய் பரவிவரும் நிலையில், தெற்காசிய நாடுகளில் நோய் பரவுவதைத் தடுப்பது குறித்து சார்க் அமைப்பிலுள்ள ஏழு நாடுகளும் கூடி ஆராய்ந்துள்ளன.

இந்த நோயைக் கட்டுப்படுத்த முழுமூச்சுடனான நடவடிககைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.



போக்குவரத்து விதிகளை மீறி, சமாந்தரமாகப் பயணம் செய்த துவிச்சக்கரவண்டி ஓட்டுநர்களைப் போக்குவரத்துப் பொலிஸார் இடைமறித்திருப்பதையும், பறிமுதல் செய்யப்பட்ட துவிச்சக்கர வண்டிகள் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச்செல்லப்படுவதையும் படங்களில் காணலாம்.

## ஜே.வி.பி. பிரமுகர்களுடன் சந்திரிகா பேச்சுவார்த்தை

### கூட்டணி குறித்துப் பேசினார்

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி தொடர்பான பேச்சுக்கள் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

ஜனாதிபதி சந்திரிகாவின் விசேட அழைப்பின்பேரில் இந்தக் கூட்டம் இடம்பெற்றதாக - ஜே.வி.பி.யின் பிரமுகர்கள் பேச்சு முடிந்த பினனர் தெரிவித்தனர்.

இதுவரை இருகட்சிகளுக்கும் இடையில் நடத்தப்பட்ட பேச்சுக்களில் இணக்கம் காணப்படாத விடயங்கள் குறித்தே இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வுத்திட்டம் தொடர்பாக இரண்டு கட்சிகளும் இணக்கம் ஒன்றை எட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ரோக்கியோ மாநாட்டு வெற்றிக்கு புலிகளின் பங்கேற்பு அவசியம்!

### ஜப்பானியத் தூதுவர் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்துவதில் அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் பெரும் பொறுப்பு இருப்பதாக இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் செய்சுறோ ஒட்சுகா தெரிவித்தார்.

ரோக்கியோவில் நடைபெறவுள்ள உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் சமாதானத்தையும், பொருளாதார அபிவிருத்தியையும் ஏற்படுத்த வேண்டுமானால் - புலிகளும், அரசாங்கமும் கூடிய ஒத்துழைப்புடன் நடந்துகொள்ள வேண்டும்.

ரோக்கியோவில் நடைபெற்றுள்ள உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் பங்கேற்பு மிகவும் அவசியமானதாகும். இந்த மாநாட்டின் வெற்றிக்குப் புலிகளின் பங்களிப்பு மிகமுக்கியம்.

இதனால், இரண்டு தரப்புக்களுமே இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவேண்டும். இதன்மூலமே நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்தமுடியும் எனபதுடன் - புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கமுடியும் என்றும் ஜப்பானியத் தூதுவர் ஒட்சுகா மேலும் குறிப்பிட்டார்.

## தடுத்துவைக்கப்பட்டுள்ள கொள்கலனை விடுவிக்குமாறு எவரும் கோரவில்லை!

### சுங்கத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் தெரிவிப்பு

சுங்கத் திணைக்களத்தால் தடுத்து வைக்கப்பட்டிருந்த கொள்கலன் ஒன்றை விடுவிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிமரசிங்கவிடம் புலிகளின் தளபதி கேணல் கருணா கோரியதாகவும் -

அதற்கு இந்த விவகாரத்தைக் கவனத்தில் கொள்ளுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - நீதி, அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸிடம் பொறுப்பை ஒப்படைத்ததாகவும் ஊடகங்களில் வெளியான தகவல்கள் தவறானவை என்று சுங்கத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பேலியகொடவிலுள்ள சுங்கத் திணைக்களத்தின் கொள்கலன்களைக் கையாளும் பிரிவின் உதவிப் பணிப்பாளரே - இவ்வாறான ஊடகச் செய்திகள் தவறானவை எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மேற்படி கொள்கலனுக்கு 4.6 மில்லியன் ரூபா தீர்வை செலுத்துமாறு உத்தரவிடப்பட்டதாகக் கூறப்பட்டிருப்பதும் தவறானது.

கொள்கலனில் இருக்கும் பொருட்களுக்கான தீர்வை இன்னமும் மதிப்பிடப்படவில்லை. அநேகமாக, இந்த கொள்கலனுக்கான தீர்வை ஐந்து லட்சம் ரூபாவாகத்தான் இருக்க முடியும்.

இந்தக் கொள்கலனில் எட்டுப் பெட்டிகளில் பிரசாரப் பொருட்கள் உள்ளதாகவும், சுவிஸிலிருந்து எஸ். சின்னத்துரை என்பவருக்கு அவரது மகனால் இந்தக் கொள்கலன் அனுபபட்டதாகவும் சுங்க அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

எட்டுப் பெட்டிகளிலும்- 4800 சி.டிகள், 1200 ஒலிநாடாக்கள், வி.சி.டிகள், 13 ஜக்கட்டுக்கள், 133 புலிச்சின்னம் பொறித்த கம்பளிச் சட்டைகள், 50 ஆயிரம் வாழ்த்து அட்டைகள், செய்தித்தாள்கள் மற்றும் சஞ்சிகைகளே இந்தக் கொள்கலனில் அடங்கியிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்தக் கொள்கலனில் பன்னிரெண்டாயிரம் இராணுவச் சீருடைகள் இருப்பதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்தச் சீருடைகளை விடுவிப்பதற்கு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் முயற்சி செய்வதாகவும், அவ்வாறு அவர் இந்தக் கொள்கலனை விடுவித்தால் அது மிகப்பெரிய குற்றச் செயலாக இருக்குமென்றும் மங்கள சமரவீர குறிப்பிட்டார். (01)

## மனித உரிமை ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதியால் நிர்வாகிகள் நியமனம்

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிர்வாகிகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்துள்ளார்.

ராதிகா குமாரசாமியைத் தலைவராகக்கொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவில் - கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட விரிவுரையாளர் என்.செல்வக்குமரன், எல்.சி.சேனநாயக்க, டாக்டர் எம்.யு.உடகம, சைனுதீன் ஆகியோர் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# தென்மராட்சிக்கு ஒதுக்கப்பட்ட 25 மில்லியன் ரூபா மோசடி!

தென்மராட்சியில் மீள்புனரமைப் பிற்கென மேற்கொள்ளப்பட்டவேலை திட்டத்தின்போது 25 மில்லியன் ரூபா நிதி மோசடி செய்யப்பட்டிருப் பதாக யாழ்.அரச அதிபர் செ.பத்ம நாதன் தெரிவித்தார்.

யுத்தத்தால் சேதமடைந்த சாவ கச்சேரி மாவட்ட அரசினர் வைத்திய சாலை மீளப்புனரமைக்க ஒதுக்கப் பட்ட 8 லட்சம் ரூபாவும், கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையை யும், சேதமடைந்த நிலையிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்க ளையும் புனரமைக்க ஒதுக்கப்பட்ட 12 மில்லியன் ரூபாவும், சாவகச்சேரி மரக்கறி விற்பனை நிலையப் புனர மைப்பிற்கு ஒதுக்கப்பட்ட 8 மில்லி யன் ரூபாவையும் பெற்றுக்கொண்ட ஒப்பந்தக்காரர்கள்- இதுவரை எது வித வேலைத்திட்டங்களையும் மேற் கொள்ளவில்லை.

இதன்மூலம் 25 மில்லியன் ரூபா நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாக வும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தென்மராமட்சிக்கு விஜயம் மேற்கொண்டபோதே அவர் இத்தகவலைத் தெரிவித்தார். (34)

# நவீன கலாசார மண்டபம் சாவகச்சேரியில் அமையும்

(தென்மராட்சி)

தென்மராட்சி - சாவகச்சேரி வாடி வீட்டு மைதானத்தில் புதிய நவீன முறையிலான கலாசார மண்டபம் ஒன்றை அமைப்பதற்கு இந்து கலா சார அமைச்சர் தி.மகேஸ்வரன் 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடுசெய் துள்ளார்.

இதற்காக வாடிவீட்டு மைதா னத்தை சுவீகரிக்க இந்து கலாசார அமைச்சு முடிவுசெய்துள்ளது. எனவே - இம் மைதானத்தில் கடந்த கால யுத்தத்தின்போது விதைக்கப் பட்ட கண்ணிவெடிகளை அகற்றி உதவுமாறு அமைச்சர் தி.மகேஸ் வரன் சாவகச்சேரி இராணுவ அதி காரிகளிடம் கோரிக்கை விடுத்துள் ளார்.

# சமாதானச் செயலகத்தின் பணிப்பாளராக பல்லியகர

(கொழும்பு)

அரசாங்க சமாதானச் செயலகத் தின் புதிய பணிப்பாளராக ஜி.எல். பல்லியகர நியமிக்கப்பட்டுள்ளார். ஹொங்கொங்கில் இலங்கைத் தூது வராகக் கடமையாற்றிய ஜி.எல.பல்லி யகர- விரைவில் சமாதானச் செயல கப் பணிப்பாளராகப் பொறுப்பேற்றுக் கொள்வார்.

சமாதானச் செயலகப் பணிப்பா ளராக இருந்த பேர்னாட் குணதில கவுக்குப் பதிலாகவே இவர் நியமிக் கப்பட்டுள்ளார். பேர்னாட் குணதிலக வெளிவிவகார அமைச்சின் செயலா ளராகப் பதவியேற்கவுள்ளார் என் பது குறிப்பிடத்தக்கது.

# அரசாங்க சேவை ஆணைக்குழு மீது அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு

(கொழும்பு)

அரசாங்க சேவை ஆணைக்குழு வுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள் ளது.

அரசாங்க நிர்வாக சேவையின் முதலாம் தரத்திலுள்ள 16 உத் தியோகத்தர்கள், தமக்குப் பதவி உயர்வு வழங்கவில்லை என்பதற்கா கவே உயர்நீதிமன்றத்தில் அடிப் படை மனித மீறல் வழக்கைத் தாக் கல் செய்துள்ளனர்.

உயர்நீதிமன்றம் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவும் தீர்மானித்துள்ளது.

# 58 தகவல் தொடர்பு நிலையங்கள் நாடளாவிய ரீதியில் அமைக்கப்படும்

(கொழும்பு)

இளைஞர்களுக்கு வேலை வாய்ப் புக்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக நாடு முழுவதிலும் 58 தகவல் தொழில் நுட்ப நிலையங்களை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மூன்றாம் நிலைக்கல்வி அமைச் சின் ஏற்பாட்டில் இந்தத் தகவல் தொழில்நுட்ப நிலையங்கள் அமைக் கப்படவுள்ளன. முற்கட்டமாக 28 தகவல் தொழில்நுட்ப நிலையங்கள் இவ்வருடத்தில் அமைக்கப்படவுள் ளன.

தகவல் தொழில்நுட்ப வலயங் களைப் பாரியளவில் நிறுவும் நோக் குடன் அமைக்கப்படவுள்ள இந்த நிலையங்களைக் கட்டுப்படுத்து வதற்காக நாரஹேன்பிட்டியில் தேசிய தகவல் தொடர்புநிலையம் அமைக் கப்படும்

இந்நிலையங்களை அமைப்பதற் கான மொத்தத் திட்டச்செலவு 400 பில்லியன் ரூபா எனவும் தெரியவரு கிறது. 2006 ஆம் ஆண்டுவரை செயற் படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத் திற்கு ஆசிய அபிவிருத்திவங்கி உதவிவழங்கும்.

# பேனாவடிவத் துப்பாக்கி சிப்பாயிடம் மீட்கப்பட்டது!

பேனாவடிவிலான துப்பாக்கி ஒன்றை வைத்திருந்த இராணுவச் சிப்பாய் ஒருவரைக் கொலன்ன பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பருத்தித்துறை இராணுவமுகாமைச் சேர்ந்த இந்தச் சிப்பாய்- ரி 56 ரக துப்பாக்கி ரவையைச் சுடக்கூடிய பேனா வடிவிலான துப்பாக்கியை வைத்திருந்தார். இந்தத் துப்பாக்கி 6 அங்குல நீளமானது எனத் தெரி விக்கப்படுகிறது.

# விளையாட்டு விழாவில் வெற்றிபெற்ற கழகங்கள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவிற்கு உட்பட்ட கழகங் களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன.

இதுவரை நடைபெற்ற போட்டி களில் 'எல்லே' விளையாட்டில்- ஆண்கள் அணியில் நாகர்கோவில் வெண்மதி விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும், பெண்கள் அணியில் மாமுனை கலைமகள் விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தினையும் பெற்றுள்ளன. கிரிக்கெட் போட்டியில் - முதலாம் இடத்தை தாளையடி சென். அன்ர னீஸ் விளையாட்டுக் கழகம் பெற் றுள்ளது. வலைப்பந்தாட்டத்தில்- தாளையடி சென். அன்ரனீஸ் விளை யாட்டுக்கழகம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

உதைபந்தாட்டத்தில் - கட்டைக் காடு சென். மேரிஸ் விளையாட்டுக்கழ கம் முதலாம் இடத்தைப் பெற்றது. (117)


# தொழில் வங்கி



| நிறுவனம் | இலங்கைத் தொழிலாளர் சமாசம் | தொழில் இல்லம் Jop net |
| --- | --- | --- |
| வெற்றிடமாகவுள்ள பதவி | பயிற்சி முகாமையாளர் | சேவை நிலைய முகாமையாளர் |
| அடிப்படைத் தகுதிகள் | முகாமைத்துவப் பட்டதாரி | பட்டதாரி, கணினி அறிவுடன் |
| விண்ணப்ப முடிவு திகதி | 10.05.2003 | 07.05.2003 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.



## வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

ஆறாவது அகவையில்



பெயர் : ஆ.பகாலினி
முகவரி : பேத்தியம்மன் கோவிலடி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி :------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்


# குடாநாட்டு சந்தை நிலவரம்



| பொருட்கள் | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
| --- | --- | --- | --- | --- | --- |
| பயிற்றங்காய் | 20/= | 20/= | 20/= | * | 10/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 80/= | 70/= | 65/= | 70/= |
| கத்தரிக்காய் | 25/= | 30/= | 40/= | 35/= | 30/= |
| பாகற்காய் | 30/= | 60/= | 40/= | 50/= | 35/= |
| வெண்டிக்காய் | 10/= | 30/= | 30/= | 30/= | 30/= |
| முருக்கங்காய் | 100/= | 100/= | 120/= | 100/= | 80/= |
| கரட் | 30/= | 50/= | 40/= | 50/= | 30/= |
| பீற்றூட் | 20/= | 40/= | 40/= | 30/= | 20/= |
| வெங்காயம் | 30/= | 35/= | 25/= | 35/= | 35/= |
| பச்சைமிளகாய் | 20/= | 40/= | 30/= | 40/= | 30/= |

# வீணே பொழுதை கழிக்காதீர் வீட்டுத்தோட்டத்தில் ஈடுபடுங்கள்

உழைப்போம் உயர்வோம்!

தொழில் மலர்

படித்துவிட்டு வீணே பொழுதைக்கழிக்கும் பல இளைஞர்களை நாம் பார்த்திருக்கிறோம். 'படித்து விட்டோம், வேலை கிடைக்கவில்லை, நாம் என்ன செய்வோம், பொழுதை எப்படிக் கழிப்போம்' என்று பல இளைஞர்களும் கூறுவதனைக் கேட்டிருக்கின்றோம்.



'இளைஞர்களே! நீங்கள் கமத்தொழிலில் ஈடுபடுங்கள்' என்று சொன்னால் அவர்கள் முகத்தைச் சுழிக்கிறார்கள். படித்து விட்டோம், எப்படிக் கமத்தொழிலில் ஈடுபட மனம் வரும் என இவர்கள் எதிர்க்கேள்வி கேட்டதையும் நாம் கேட்டுத்தான் இருக்கின்றோம். கமத்தொழிலில் ஈடுபடுவது கௌரவக் குறைவு என்று ஒரு சிலர் நினைப்பதையும் நாம் அவதானித்து இருக்கின்றோம்.

## பலனும், பயனும் நிரம்ப உண்டு

சொகுசாக வாழ்ந்தோம், எப்படி வெயிலில், புழுதியில், சேற்றில் வேலை செய்யமுடியும் என வேறு சிலர் வெளிப்படையாகக் கேட்பதையும் செவிமடுத்துள்ளோம்.

இப்படியான சிந்தனை, செயற்போக்கினைக் கொண்டவர்கள் வீட்டுத்தோட்டத்தில் ஈடுபடலாம் என்று ஓர் உண்மையைக் கமத்தொழில் அதிகாரிகள் அண்மைக்காலமாக வலியுறுத்தி வருகின்றனர்.

வீட்டுத்தோட்டம் என்றால் என்ன? அதை எப்படி மேற்கொள்வது? வீட்டுத்தோட்டத்தில் எவ்வகையான பயிர்களைப் பயிரிடலாம்? என்று பல கேள்விகளை இவர்கள் அடுக்கிக்கொண்டு போகலாம். அவர்களின் அறியாமைக்கு அறிவூட்டும் முகமாகவும், பொதுவாக வீட்டுத்தோட்டம் என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக விளங்கும் முகமாகவும் இங்கு சில தகவல்கள் வெளியிடப்படுகின்றன.

ஒருவர் குடியிருக்கும் வீட்டைச் சுற்றியுள்ள எஞ்சிய நிலப்பரப்பிலேயே வீட்டுத்தோட்டம் அமைக்கப்படும். எனவே, இந்த நிலப்பரப்புக் குறுகியதாக இருக்கலாம் அல்லது விசாலமாக இருக்கலாம். இடப்பரப்பிற்கு ஏற்றவகையில் பயிர்களின் தொகையை அதிகரிக்கலாம் அல்லது குறைக்கலாம்.

வீட்டுத் தோட்டத்தில் குறுகியகாலப் பயிர்களையும், குடும்பத்திலுள்ள அனைவரினதும் தேவைகளுக்கான மரங்களையும் நாட்டலாம். பயிர்களைத் தேர்ந்தெடுக்கும்போது இலைகளை அதிகம்கொண்ட பயிர்களிலும், மரங்களைத் தேர்ந்தெடுக்கும்போது குறுகியகாலத்தில் பழங்களைத் தரக்கூடிய மரங்களிலும் கவனம்செலுத்த வேண்டும்.

முருங்கை, ரம்பை, கறிவேப்பிலை, தேசிக்காய் மரங்களை நாட்டுவது அவசியமாகும். குடும்பத்தின் பழத் தேவையைப் பப்பாசி, வாழை, மா மரங்கள் பூர்த்தி செய்யும்.

உங்கள் வீட்டில் தோட்டம் அறவே இல்லை என்றால் கவலைப்படத் தேவையில்லை. தொட்டிகள், பழுதடைந்த பற்றறி கலன்கள், பொலித்தீன் பைகள், ரின்கள் போன்றவற்றில் பயிர்களை விளைவிக்கலாம்.

மரக்கறிச் செய்கையைப் பூந்தோட்டத்துடன் இணைந்து மேற்கொள்ளலாம். பூமரங்கள் வீட்டிற்கு அழகைக் கொடுக்கும்வேளை, மரக்கறிகள் உங்கள் வீட்டுத்தேவையைப் பூர்த்திசெய்யும்.

பழ மரங்களை நடும்போது, சூரிய வெளிச்சமுள்ள இடத்தில் நடவும். ஏனையவற்றை ஓரளவு நிழலுள்ள இடத்திலும் நடலாம். உங்கள் வீட்டுத்தோட்டம் வெற்றி நடைபோட வேண்டுமென்றால், வருடம் முழுவதும் நீர் வசதி இருக்கவேண்டும்.

மரக்கறிச் செய்கையை மேற்கொள்ளும்போது, அதிக போஷாக்கை வழங்கக்கூடிய மரக்கறிகளைத் தெரிவுசெய்ய வேண்டும். குடும்பத்திலுள்ள அனைவரும் வருடம் முழுவதும் சமமான போஷாக்குள்ள உணவை உண்ணுவதற்குச் சந்தர்ப்பம் கிட்டும்வகையில் மரக்கறி, பழமரச் செய்கைகளை மேற்கொள்ளவேண்டும். இலைகளைக் கொண்ட மரக்கறிகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும்.

பின்வரும் மரக்கறிகளைப் பயிரிட்டால் நிரம்பப். பயன் கிட்டும்.

கங்குல், பொன்னாங்காணி, கீரை, வல்லாரை, முருங்கை, கோவா, கத்தரி, போஞ்சி, வெண்டிக்காய், பாகற்காய், கருணைக்கிழங்கு, நோல்கோல், ராபு, பீட்ரூட், தக்காளி என்பனவற்றுடன்,

மிளகாய், கறிமிளகாய், வெங்காயம், ரம்பை, கறிவேப்பிலை, இஞ்சி, தேசிக்காய், பப்பாசி போன்றவற்றின் செய்கையையும் மேற்கொள்ளலாம்.

### கிருமிகளை அழித்தல்

கிருமிகளை அழிப்பதற்குக் கிருமிநாசினிகளைப் பாவிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். வீட்டிலுள்ள கழிவுப் பொருட்களைப் பாவித்துக்கூட கிருமித்தாக்கத்தினைக் கட்டுப்படுத்தலாம்.

நத்தையின் தாக்கத்தைக் கட்டுப்படுத்திப் பாத்திகளைச் சுற்றிவர வெங்காயச் செய்கையை மேற்கொள்ளவும்.

சோப்புக் கரைசலைப் பாவிப்பதன் மூலமும் இலைகளில் பூச்சித் தாக்கத்தினை கட்டுப்படுத்த லாம். 30 கிராம் சோப்பை 41/2 லீற்றர் நீரில் கரைத்து, 2 அவுன்ஸ் மண்ணெண்ணையைக் கரைசலுடன் சேர்க்கவும். பின் இக்கலவையை இலைகள் மீது விசிறவும். உற்பத்தியைப் பெறுவதற்கு இரு வாரங்களுக்கு முன் இக்கலவை உபயோகிப்பதைத் தவிர்த்துக் கொள்ளவும்.

பூச்சி, புழுக்களைக் கட்டுப்படுத்த மரச்சாம்பலைப் பாத்திகளைச் சுற்றிவரப் போடலாம் அல்லது மரச்சாம்பலை நீருடன் கலந்து தெளிக்கலாம். இதேபோல கறுத்தச் சுருட்டை அல்லது புகையிலையை ஒரு போத்தல் நீரில் போட்டுக் கொதிக்க வைக்கவும். ஆறிய பின் இக்கலவையை இலைகளின் மீது தெளிக்கவும்.

கிருமி தாக்கிய பகுதிகளை அகற்றுவதன் மூலமும் கிருமி பரவுதலைத் தடுக்கமுடியும்.

### உரங்கள்

முற்றத்தைக் கூட்டும்போது கிடைக்கும் இலை குழைகளையும், சமயலறைக் கழிவுகளையும் உயரமான கீழ்ப்பக்கம் அற்ற, இரு பக்கமும் துவாரங்கள் உள்ள பெட்டியில் அல்லது தகர ரின்னில் போட்டு வைக்கவும். பின், அக்கலவையை உரமாகப் பாவிக்கலாம். இக்கலவை யுடன் சாணத்தைச் சேர்ப்பது சிறந்தது. சாணம் இல்லாவிட் டால் சிறிதளவு யூரியாவைக் கலக்கலாம். செயற்கை உரங்களையும் தேவையான அளவு பாவிக்கலாம். இவ்வித மான உரங்கள் பயிரில் இருந்து கிட்டத்தட்ட 6 சென்ரிமீற்றர் தூரத்தில் போடவும்.

இலைகளைக்கொண்ட மரக்கறிகள் அதிக உயிர்ச் சத்துக் களையும், கனிப்பொருட்களையும் கொண்டன. இம்மாதிரியான மரக்கறிகளை உங்கள் தோட்டத்திலேயே பயிரிடுவதனால், தேவையற்ற செயற்கை உரங்களுடன் சேராத, கிருமிகளின் தாக்கமற்ற மரக்கறிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

எனவே, இளைஞர்களே வீட்டுத்தோட்டத்தில் ஈடுபட்டு, உங்கள் வீட்டுற்குத் தேவையான சிறந்த மரக்கறிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். இப்படிச் செய்வதனால் பொழுதைப் பயனுள்ளதாகப் போக்கமுடியும்.

தருவது:
தகவல் தொடர்பு மையம் (மாணவர் பகுதி) விவசாயபீடம்.

## நெற்றில் கிறப் புழு

**NETTLE GRUB**

**(Lepidoptera Limacodidae)**

தென்னை நாற்றுக்களில் சேதத்தை விளைவிக்கும் அந்துப்பூச்சியின் புழுவே - நெற்றில் கிறப் புழுவாகும். இதன் பெருக்கம் குறைவானது. ஆனால், தென்னை நாற்றுக்களில் இதன் சேதம் அதிகமானதாகும்.

பொதுவாகத் தென்னை நாற்று மேடைகளிலும், தென்னங்கன்றுகள் நாட்டப்பட்ட பிரதேசங்களிலும் இதன் தாக்கத்தைக் காணலாம்.



நாற்றுக்களின் ஓலைகளை முற்றாக, மிகவிரைவாகச் சாப்பிடக்கூடிய புழுவாகும்.

### வாழ்க்கை வட்டம்

பெண் அந்துப்பூச்சிகள் கொத்துக்கொத்தாக ஓலைகளின் கீழ்ப்பாகத்தில் முட்டைகளை இடுகின்றன. 7 நாட்களில் முட்டையிலிருந்து குடம்பிகள் வெளிவருகின்றன. வந்தவுடன், மிகவிரைவாக இளம் தென்னை நாற்றுக்களின் ஓலைகளை 'சிபுகம்' என்ற வெட்டும் உறுப்பினால் ஓலைகளை வெட்டி அரைத்து உண்ணுகின்றன. இதன் முதுகில் வட்டமான வடிவத்தில் பொட்டுக்கள் காணப்படும். அத்துடன், மயிர்க்கொட்டிப்புழுவில் உள்ளதுபோல் மிகவும் கூரான ஈட்டிபோன்ற அமைப்பில் மயிர்கள் பக்கப்பாட்டிலும், முதுகிலும் இளம்பச்சை நிறத்தில் காணப்படும். நன்றாக முதிர்ந்த புழுவானது 3.5 Cm நீளமுடையது. இது 50 - 60 நாட்களில் கூட்டுப்புழுவாக மாற்றம் அடைகின்றது. மேலும், அந்துப்பூச்சியானது 40 - 50 நாட்களில் கூட்டுப்புழுவிலிருந்து வெளியேறும்.

**சேதம்:** கூட்டுப்புழுவாக மாறும் 50 - 60 நாட்களிலும் மிகவிரைவாகச் சாப்பிடுவதால், தென்னங் கன்றுகளின் ஓலைகள் மாடு சாப்பிட்ட பின் உள்ள தோற்றத்தில் காணப்படும்.

**கட்டுப்பாடு:** இதன் பெருக்கம் குறைவானபடியால் பிடித்து அழிக்கலாம். ஏனைய ஜந்துக்களிலிருந்து பாதுகாக்கவே விகாரமான பயங்கரத் தோற்றத்தில் இது காணப்படுகின்றது.

### மனிதரில் இதன் தாக்கம்

தொழிலாளர்கள் இதனை அறியாமல் கையாளும் போது, உடம்பில்பட்டால் மிகவும் அவதிப்படுவர். காய்ச்சல் வரும். வைத்தியசாலைக்குக் கொண்டுபோக வேண்டிவரும். அவ்வளவு காரமான புழுவாகும். கூரான மயிர்களிலிருந்து வெளியேறும் திரவமே அதன் தாங்கமுடியாத வலிக்குக் காரணம். இது தென்னை ஈக்கினை உண்பதாலும், அதன் விஷத்தன்மை கூடிக்காணப்படுகின்றது.

**க.தனிநாயகம்**
*தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், கிளிநொச்சி.*


## ஒரு உயர்வுக்குப் பின்னால்....!



தமிழர் தாயகமெங்கும் உயர்வுற்று வாழும்

- தொழிலாளர்கள்
- வர்த்தகர்கள்
- ஆற்றல்மிகு கடற்தொழிலாளர்கள்
- தொழில் முயற்சியாளர்கள்
- திறமையான விவசாயிகள்
- இன்னும் ஏனையோரும்

தாங்கள் உயர்ந்துவந்த பாதையை - 'நமது ஈழநாடு' வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள ஒரு அரிய வாய்ப்பு.



சுயவிபரத்துடன் - சாதித்த இலக்குகளைக் குறிப்பிட்டு
'ஒரு உயர்வுக்குப் பின்னால்...!'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரியுடன் நேரிலோ, தபால் மூலமோ உடன் தொடர்புகொள்ளுங்கள்.
நாங்கள் உங்களுடன் நேரில் கலந்துரையாடியதும், ஒவ்வொரு வாரமும்
'உழைப்போம் உயர்வோம்' தொழில்மலர் பகுதியில் உங்கள் வெற்றிக்கதை பிரசுரமாகும்.
எங்கே தயாராகி விட்டீர்களா?
உங்கள் வெற்றி ஏனையோருக்கும் வழிகாட்டட்டும்!

# க.பொ.த உயர்தர பொதுச் சாதாரண பரீட்சைக்கான
# பரீட்சை நுட்பங்கள்

க.பொ.த உயர்தர சகல மாணவர்களுக்கும் பொதுவான பரீட்சையாக, மேற்படி பரீட்சை 07.05.2003 அன்று நடைபெறவுள்ளமை யாவரும் அறிந்ததே. எந்த ஓர் மாணவனும் ஏனைய சகல பாடங்களிலும் அதி சிறப்புச் சித்தி பெற்றால் மட்டும் பல்கலைக்கழக அனுமதியைப் பெறமுடியாது. மாறாகக் குறிப்பிட்ட ஒரு மாணவன் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுவதாயின், இப் பாடத்தில் சித்தி பெறுவது மிகக்கட்டாயமானதாகும். இப்பாடம் தொடர்பான சகல விளக்கங்களையும் உள்ளடக்கிய வழிகாட்டி நூல் அண்மையில் எம்மால் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. இதற்கும் மேலாக இப்பரீட்சையை மாணவர்கள் எவ்வாறு அணுகலாம் என்பது தொடர்பான விடயங்களை இங்கே தொகுத்துத் தருவதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

(நேற்றைய தொடர்ச்சி....)

*2 ஆம், 3 ஆம் வினாக்கள் பின்வரும் தகவலை அடிப்படையாகக் கொண்டனவாகும்.*

- A,B,C,D,E,F,G என்ற ஏழு நண்பர்கள் வட்டமேசை ஒன்றைச் சுற்றி அமர்ந்த வண்ணம், குறிப்பிட்ட விடயம் பற்றிக் கலந்துரையாடுகின்றனர்.
- F - G இற்கு வலப்பக்கத்தில் இரண்டாவதாக இருக்கினறார்.
- B - C இற்கு கிட்டவன்றி, F இற்கு கிட்ட இருக்கின்றார்.
- C இற்கு கிட்ட இருக்கும் E - G இற்கு வலப்பக்கத்தில் மூன்றாவதாக இருக்கின்றார்.
- D - A இற்கும் C இற்கும் இடையே இருக்கின்றார்.

02. G இற்கு கிட்ட இடப்பக்கத்தில் இருப்பவர் யார்?
1. D 2. A 3. C 4. F 5. E

03. B இன் இடப்பக்கத்தில் நான்காவதாக இருப்பவர் யார்?
1. A 2. F 3. C 4. E 5. G

04. குற்றுகளின் தொடர்ச்சியான ஒழுங்குகள் குறித்த ஓர் கோலத்திற்கேற்ப ஏற்படுத்தப்பட்டுள்ளன. உருவிற்கு ஏற்ப, முதலாம் ஒழுக்குக்குப் பின்னர் ஒவ்வோர் ஒழுக்கும் முந்திய ஒழுங்கின் கோலத்திற்கு ஒரு நிரை குற்றுகளைச் சேர்ப்பதன் மூலம் பிறப்பிக்கப்படுகின்றது.



இக்கோலம் தொடருமெனின், பின்வருவனவற்றில் எது பத்தாம் ஒழுங்கிலுள்ள குற்றுகளின் எண்ணிக்கையைத் தருகின்றது.

1. 60 2. 55 3. 48 4. 52 5. 70

05. பின்வரும் உருவில் எத்தனை சதுரங்கள் உள்ளன



1. 15 2. 16 3. 17 4. 18 5. 12

06. இவ்வினாவில் ஒவ்வொரு அடைப்பினுள்ளும் எண்கள் உள்ளன. அவ்வெண்களுக்கிடையே உள்ள தொடர்புடைமைகளை விளங்கிக்கொண்டு, வெற்றிடத்தில் இடப்படவேண்டிய எண்ணைத் தெரிவுசெய்க.

| | | |
|---|---|---|
| 26 | 80 | 14 |
| 32 | | 28 |

1. 90 2. 100 3. 120 4. 130 5. 140

07. கடந்த பன்னிரண்டு மாதங்களில் இலங்கை பங்குச் சந்தை மாற்றத்தின் சராசரி விளைவுகள் கீழேயுள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளன.




எந்த மூன்று மாதகால இடைவெளியில் பங்குச்சந்தை சராசரியில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

1. ஜனவரி - மார்ச் 2. ஜூன் - ஒகஸ்ட்
3. நவம்பர் - ஜனவரி 4. மார்ச் - மே
5. செப்ரெம்பர் - நவம்பர்

08. பங்குச்சந்தை சராசரியில் கூடிய விளைவையும், குறைந்த விளைவையும் எந்த இரு மாதங்கள் காட்டுகின்றன

1. டிசம்பர், நவம்பர் 2. ஜூன், செப்ரெம்பர்
3. ஒக்ரோபர், ஜூலை 4. ஒக்ரோபர், ஏப்ரல்
5. ஜூன், ஜூலை

09. புகைத்தல் உடலுக்குப் பாதகமானது என்பதை அறிந்திருந்தும், மனிதர்கள் கொண்ட பழக்கத்தைக் கைவிடத் தயங்குகின்றமையால் புகைக்கின்றனர். இத்தர்க்கத்தில் காட்டப்பட்டுள்ள கருத்தைப் பின்வருவனவற்றுள் எது மேலும் உறுதிப்படுத்துகின்றது.

1. பழகப் பழகப் பாலும் புளிக்கும்.
2. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
3. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.
4. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
5. தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்.

10. முகச்சவரம் செய்வதற்கும், தலைமயிர் வெட்டுவதற்குமாக ஒவ்வொரு ஆண்டமிருந்தும் வரியை அறவிடுவதற்கு யாதாயினும் ஓர் அரசு தீர்மானித்தால், ஏற்படக் கூடுமெனக் கருதத்தக்க சில விளைவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

A : ஆண்கள் பலர் முகச்சவரம் செய்வதையும், தலைமயிர் வெட்டுவதையும் கைவிடல்.
B : இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் வருமானம் குறைதல்.
C : சவரக்கத்தி, சவர அலகு போன்ற உபகரணங்களை இறக்குமதி செய்வதற்குச் செலவிடப்படும் அந்நியச் செலவாணியை வேறு பணிகளுக்குப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கின்றன.
D : தாடி, தலைமயிர் ஆகியவற்றை வளர்ப்பவர்களும், வெட்டுபவர்களும் தனித்தனியாக அரசிற்கெதிராக நடவடிக்கை எடுத்தல்.

ஏற்படக்கூடுமெனக் கருதப்படும் மேற்குறித்த விளைவுகளிடையே, உண்மையில் மிகவிரைவாக ஏற்படத்தக்க விளைவுகளைக் கொண்ட விடை யாது?

1. A, C 2. C, D 3. A, B
4. B, D 5. A,D

### (IV) கிரகிப்பதற்கும் தொடர்பாடலுக்குமான ஆற்றல்.

இப்பகுதியில் 46 - 60 வரையான வினாக்கள் பின்வரும் வடிவங்களில் அமையும். இப்பகுதிக்கான வினாக்களுக்கு மாணவர்கள் விடையளிக்கும்போது, பின்வரும் வடிவங்களையுடைய வினாக்களைக் கூடியபயிற்சி செய்தல் வேண்டும்.

(1) நச்சுக் கழிவுப்பொருள் சூழலுக்குள் வெளியேற்றப்படுதல் கட்டுப்படுத்தப்படாதபோது, சூழலின் சமநிலை குழப்பமடைகிறது. ஏனெனில், எல்லாக் கழிவுகளும் அவ்வாறு வெளியேற்றப்படும்போது இயற்கையின் சுத்தப்படுத்தும் சக்திகள் பயனுறுதியுள்ள முறையில் செயற்படமுடியாது. பின்வருவனவற்றில் எது மேற்குறித்த கூற்றுக்களினால் குறிப்பாக உணர்த்தப்படுகிறது.

1. மக்களால் சூழல் தொடர்ந்து மாசுபடுத்தப்படுகின்றது.
2. அளவுக்கு அதிகமாகக் கழிவுப்பொருள் வெளியேற்றப்படுவதால் சூழல் மாசடைகின்றது.
3. கழிவுகளைச் சுத்தப்படுத்துவதில் இயற்கை ஓர் திறமையான சக்தியாக அமைகிறது.
4. இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதற்கான கல்வியை மக்களுக்குப் புகட்டுதல் வேண்டும்.
5. இயற்கையின் சுத்தப்படுத்தும் சக்திகள் படிப்படியாக திறனற்று வருகின்றன.

(2) ஒரு செயற்திட்ட அறிக்கை தயாரித்தலில் உள்ளடக்கப்பட்ட பல முக்கிய படிமுறைகள் கீழே தரப்பபட்டுள்ளன. இப்படிமுறைகள் ஒழுங்கான வரிசைக்கிரமப்படி தரப்படவில்லை.

A - தகவல்களைச் சேகரித்தல்.
B - ஏனையவர்களின் கருத்துக்களை ஆலோசித்தல்.
C - பொருத்தமான ஓர் பிரச்சினையை இனங்காணுதல்.
D - தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல்.
E - நோக்கங்களைத் தீர்மானித்தல்.
F - முடிவுகளை முன்வைத்தல்.
G - முறையியலைத் தீர்மானித்தல்.

இப்படிமுறைகளை ஒழுங்கான வரிசைக்கிரமப்படி காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

1) ADFEBCG 2) GCADEFB 3) CBEGAOF
4) BACEGDF 5) CAGDEFB.

(3) பின்வரும் வினாவில் ஓர் எளிய நிகழ்ச்சியுடன் தொடர்புபட்ட எட்டுச் சந்தர்ப்பங்கள் A தொடக்கம் H வரைக்கும் படங்களின் மூலம் காட்டப்பட்டுள்ளன. அப்படங்கள் ஒழுங்கு வரிசையில் தரப்படவில்லை. பின்வரும் விடைகளில் ஒன்று மாத்திரம் நான்கு சந்தர்ப்பங்களை ஒழுங்காகக் காட்டுகின்றது. அவ்விடை யாது? உமது வசதிக்காக இந்நிகழ்ச்சி பற்றிய சுருக்கமான விவரம் படங்களுடன் தரப்பட்டுள்ளது.

- மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் பிடித்த எல்லா மீனையும் பூனை உண்டமையால் அவர் கவலையுற்றார்.




1. EBCH 2. DBHG 3. CEAF
4. DBFC 5. BDEG

(4) இவ்வினாவில் முதல் மூன்று ஆங்கிலச்சொற்களும் இலக்கங்களான இரகசிய மொழிக்குப் பெயர்க்கப்பட்டுள்ளன. ஆங்கிலச் சொற்கள் அமைந்த ஒழுங்கில் இரகசியச் சொற்கள் தரப்படவில்லை என்பதைக் கருத்திற்கொண்டு, நான்காம் ஆங்கிலச் சொல்லுக்குரிய இரகசியச் சொல்லை இனங்கண்டு, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தருக.

FAIL - 2461, TOLD - 9473, TAME - 2538,
MODEL..............................

1. 35681 2. 46321 3. 65813
4. 54138 5. 84512

**வினாக்கள் 5-6 வரையானவை இவ்வரிப்படத்துடன் தொடர்பானவை**




(5) மிக அதிக இறக்குமதிச் செலவீனத்தைக் கொண்ட வகை.
1. வாகனங்கள் 2. உணவு
3. ஏனையவை 4. ஆடைவகை
5. கைத்தொழில் உதிரிப்பாகம்

(6) உணவுப்பொருட்களுக்கான இறக்குமதிச் செலவீனம் மொத்த செலவீனத்தின் எத்தனை வீதம்

1. 27.7% 2. 37.5% 3. 15.2%
4. 2.7% 5. 10.8%

(7) கீழே தரப்பட்டுள்ள 8 படங்களில் குறித்த 4 படங்கள் மட்டும் ஓர் தொடர் ஒழுங்கில் மாணவன் வீட்டில் இருந்து புறப்பட்டு, பாடசாலையை அடையும் வரையான காட்சியைச் சித்திரிக்கின்றது. அத்தொடர் எது?




1. ABDF 2. ACGF 3. ABCF
4. AHCF 5. AECF

(8) நாய்களுக்குப் பகுத்தறிவு கிடையாது.
பொமேரியன் நாய்கள் எல்லாம் நாய்களே.
மேற்படி ஆய்வுக்குப் பொருத்தமான எடுகோள் யாது?

1. எனவே, பொமேரியன் நாய்களுக்குப் பகுத்தறிவு உண்டு.
2. எனவே, பொமேரியன் தவிர்ந்த ஏனையவற்றிற்குப் பகுத்தறிவு உண்டு.
3. எனவே, பொமேரியன் நாய்களுக்கெல்லாம் பகுத்தறிவு கிடையாது.
4. நாய்களுக்குப் பகுத்தறிவு கிடையாது.
5. எனவே, பொமேரியன் நாய்களுக்குப் பகுத்தறிவு இல்லை.

(9) பின்வரும் கூற்றுக்களிடையே தனிப்பட்ட அபிப்பிராயத்தைக் காட்டுவது யாது?

1. சம்பலும் பழஞ்சோறும் சுவைமிகு உணவாகும்.
2. நெத்தலியைச் சாப்பிடும்போது கல்சியம் கிடைக்கும்.
3. சோறு மாப்பொருள் மிக்க உணவாகும்.
4. தோடம்பழத்தில் விற்றமின் C உண்டு.
5. மீன் புரதம்மிக்க உணவாகும்.

(விடைகள் நாளை வெளிவரும்...)

**P. கமல்தாசன்**
(அதிதி விரிவுரையாளர் - திறந்த பல்கலைக்கழகம், யாழ்.)
**P. உமாசங்கர்**
(பொது அறிவு - நுண்ணறிவு பிரபல எழுத்தாளர்)

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்.

- திருக்குறள்.

## நமது நோக்கு

### பாராட்டத்தக்க செயல் !

நீண்ட காலமாகத் தொடர்ந்த போரினால் பாதிக்கப்பட்டிருக்கும், சிதைக்கப்பட்டிருக்கும் மக்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை - ஓரளவுக்காவது நிறைவேற்றிக்கொள்ள வழிசெய்யும் முன்னுதாரணம் ஒன்று யாழ்.வைத்தியசாலையில் நடைபெற்றிருக்கிறது.

தனியார் நிறுவனமொன்று - யாழ்.வைத்தியசாலையின் குழந்தைகள் விடுதியைத் தனது சொந்தச் செலவில் புனரமைத்து, அழகுபடுத்திக் கொடுத்திருக்கிறது. உபகரணங்கள் சிலவும் வழங்கப்பட்டிருக்கின்றன.

இந்த நடவடிக்கையானது - யாழ். வைத்தியசாலையைப் பொறுத்தவரையில், அதன் தேவைகளை நிறைவு செய்துகொள்வதற்கு பல வகையிலும் உதவிகள் அவசியமான கட்டத்தில் - காலத்தால் செய்யப்படுகின்ற உதவியென்றே கூறமுடியும்.

யாழ்.வைத்தியசாலையில் விடுதிகளைப் புனரமைப்பதற்கும், திருத்தங்களை மேற்கொள்வதற்கும் அரசாங்கத்தின் உதவிகள் கிடைக்காத பட்சத்தில்- அத்தகைய தாமதங்களும், புறக்கணிப்பும் - நோயாளர்களைப் பாதித்துவிடக் கூடாதென்பதற்காக - விடுதிகளைத் தாராளமனங்கொண்ட நிறுவனங்களதும், வர்த்தகர்களதும் துணைகொண்டு புனரமைப்பதற்காக - வைத்தியசாலைப் பணிப்பாளர் பெருமுயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

இந்த முயற்சிகளுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள பல தனியார் நிறுவனங்களோ, வர்த்தக சமூகமோ முன்வராத நிலையில் - ஒரேயொரு தனியார் நிறுவனம் மட்டும் குழந்தைகள் விடுதிப்புனரமைப்பைப் பொறுப்பேற்று - முன்னுதாரணமாக நடந்து கொண்டிருக்கிறது.

இந்தவகையில் - குறிப்பிட்ட நிறுவனமும், வைத்தியசாலைப் பணிப்பாளரும் பாராட்டுக்குரியவர்களாகும் அதேவேளை -

இவ்வாறானதொரு உதவியை வழங்குவதற்கு ஏனைய நிறுவனங்களும், வர்த்தக சமூகமும் முன்வராததையிட்டு கவலையும், வேதனையும்தான் சூழ்கிறது.

இவ்வாறானதொரு முயற்சியை மேற்கொள்வதன் மூலமும், முயற்சிக்கு உதவுவதன் மூலமும் - சிதைந்து கிடக்கும் - சமூகக் கட்டுமானத்தை ஓரளவுக்காவது முன்னேற்றிக்கொள்ளலாம் என்ற யதார்த்தமான உண்மையை உணர்ந்து - செல்வமும், பரோபகார மனங்கொண்டவர்கள் செயலாற்ற வேண்டியது சமூகத்திற்காற்றவேண்டிய பணியாகும்.

யாழ்.மாவட்டத்திலுள்ள தனியார் நிறுவனங்களும், வர்த்தக சமூகமும் - இங்குள்ள மக்களுக்குத் தமது பொருட்களையும், சேவைகளையும் வழங்கியே தம்மை உயர்வுபடுத்திக்கொண்டன/உயர்வுபடுத்திவருகின்றன. இந்நிலையில் - தாம், இச்சமூகத்திலிருந்து சம்பாதித்துக்கொள்ளும் ஆதாயத்தில்- ஒரு குறிப்பிட்ட வீதத்தை இச்சமூகத்தின் பயன்பாட்டிற்கு வழங்குவதற்கு அவர்கள் முன்வராவிட்டால் - அது நியாயமான வாணிபமுயற்சியாக அமையமாட்டாது.

தனியே - யாழ்.வைத்தியசாலை என்றுமட்டுமல்ல, மக்கள் பயன்படுத்தும் பொது இடங்கள், வீதிகள், பஸ் தரிப்பிடங்கள், பொழுதுபோக்கு மையங்கள், விளையாட்டுத் தளங்கள் என இன்னோரன்ன கட்டுமானங்களை புனரமைப்பதற்கு - ஒவ்வொருவரும் சிறுசிறு உதவிகளைச் செய்ய முன் வருவார்களாயின், அது மிகப்பெரும் தொண்டாகவே கருதப்படும்.

தமிழ்ப்பகுதிகள் மீதான கடந்தகாலத்தைய திட்டமிட்ட புறக்கணிப்பும், பொருளாதாரத் தடைகளும் - தமிழினத்தின் ஆரோக்கியமான வளர்ச்சியை மிக மோசமாகவே பாதித்துள்ளபோது-

சமூக அக்கறையுடன் செயலாற்றுவதற்கு அனைவரும் தயாராகுவாராயின் - எத்தகைய அழுத்தங்களையும், பாதிப்புக்களையும் கடந்து தமிழினம் நிமிர்ந்து நிற்க முடியும்.

இந்தவகையில் - யாழ்.வைத்தியசாலையில் தனியார் நிறுவனமொன்று செய்து முடித்திருக்கின்ற உதவியைப் போன்று - குடாநாட்டிலுள்ள ஏனைய நிறுவனங்களும், வர்த்தக சமூகமும் தம்மாலியன்ற ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்குவதற்குச் சிந்திக்கவேண்டும், செயலாற்ற வேண்டும்.

# தொழிலாளர் உரிமைக்கு மட்டுமன்றி இன விடுதலைக்கும் குரல் கொடுப்போம்!

## கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் அழைப்பு

உலகத் தொழிலாளர் தம் உரிமைகளை வென்றெடுத்த மே நாளில் அரசினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட தமிழின ஒடுக்குமுறையை எம் இனஎழுச்சியால் உலகிற்கு உணர்த்த-

தமிழ்த்தேசிய இனத்தின் கூட்டு மே நாள் குழு ஏற்பாடு செய்துள்ள மே நாள் பேரணியிலும், பொதுக்கூட்டத்திலும் கூட்டுறவுத்துறை சார்ந்த அனைவரையும் கலந்துகொண்டு, கூட்டுறவு இயக்கத்தின் எழுச்சியைப் பறைசாற்றுமாறு யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத் தலைவர் ப.கனகலிங்கம் அறைகூவல் விடுத்துள்ளார்.

யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் விடுத்துள்ள மேதினம் தொடர்பான அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது -

தமிழ்த்தேசிய இனத்தின் தலைமை தமிழீழ விடுதலைப் புலிகள்தான் என்பதை தமிழ்பேசும் மக்கள் அங்கீகரித்திருக்கின்றார்கள். இது கடந்தகாலங்களில் தெட்டத்தெளிவாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

அந்தவகையில் தமிழ்த்தேசியம், சுயநிர்ணயம், தன்னாட்சி உரிமை ஆகியன தமிழர்களின் அடிப்படை உரிமை. இதனை தமிழ்பேசும் மக்கள் ஒருபோதும் விட்டுக்கொடுக்கமாட்டார்கள்.

எதிர்காலத்தில் சிறிலங்கா அரசு இவ்வுண்மை நிலையினை உணர்ந்து, தமிழ்மக்களது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றி வைக்கவேண்டும். அதுவே தமிழ்பேசும் மக்களது பெருவிருப்பமாகும்.

அரசு - புலிகள் இணைந்து உருவாக்கிய புரிந்துணர்வு உடன்பாடு ஓராண்டைத் தாண்டிவிட்டநிலையில், அதன் நடவடிக்கைகள் கேள்விக்குறியாக மாறியுள்ளது.

நிரந்தர சமாதானம், அரசியற்தீர்வு என்பன பெரும் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது. உடன்பாடு எட்டப்பட்டபோது இருந்த மகிழ்ச்சியும், எதிர்பார்ப்பும் தேய்ந்து வருகின்றது.

இத் தேக்கநிலைகளை மாற்றிப் புதிய நம்பிக்கையூட்டும் அரசியல் சூழ்நிலைகள் தோன்ற எதிர்வரும் மேநாளைப் பயன்படுத்துவோம். எமது எழுச்சி இனத்தின் விடுதலைக்கு உரமூட்டும்.

அதேவேளை, கடந்தகாலங்களில் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் கூட்டுறவாளர்களே. பல மில்லியன் ரூபா கூட்டுறவுச்சங்கங்களுக்கு இழப்பு ஏற்பட்டது. ஆனால், இதுவரை அரசிடமிருந்து எவ்வித இழப்பீடும் கிடைக்கவில்லை.

கூட்டுறவுப்பணியாளர்களின் உழைப்பிற்கேற்ற ஊதியமோ, ஊக்குவிப்போ கிடைப்பதில்லை.

எதிர்காலத்தில் கூட்டுறவுப்பணியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படாவிட்டால், அது மோசமான பின் விளைவுகளை ஏற்படுத்தும். கூட்டுறவாளர்களும், கூட்டுறவுப்பணியாளர்களும் யுத்த சூழ்நிலையில் மக்களுக்காகக் கடுமையாக உழைத்தவர்கள் என்பதை இம் மேநாளில் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இம் மேநாள் - தொழிலாளர் வர்க்கத்தினரின் உரிமைப் போராட்டத்திற்குக் குரல் கொடுப்பதோடு நின்று விடவில்லை. மாறாக தமிழ்பேசும் இனத்தின் முழுவிடுதலைக்காகவும் குரல் கொடுக்கின்றது என்பதை நாம் வலியுறுத்துகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஜேர்மனிக்குச் சென்றுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் - தமது இரண்டாம் நாள் பயணத்தில் பேர்கோப் நிறுவனப்பிரதிநிதிகளைச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

## வைத்திய வசதிகளின்றி உள்ள அல்லைப்பிட்டிப் பகுதி மக்கள்

அல்லைப்பிட்டி பகுதியிலுள்ள பொதுமக்கள் - அரசினர் வைத்தியசாலையோ, நிரந்தர வைத்திய வசதிகளோ இன்றிப் பெரும்கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வைத்தியவசதிகளைப் பெற அல்லைப்பிட்டியிலிருந்து பல மைல் தூரம் கடந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கே இவர்கள் வரவேண்டியுள்ளது.

இப்பகுதியில் மக்கள் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மண்டைதீவு அரசினர் வைத்தியசாலைக்குச் சென்று வைத்திய சேவைகளைப் பெற்றனர்.

எனினும், கடந்தகால போர் அனர்த்தங்களால் இவ்வைத்தியசாலையும் இயங்க முடியாதுள்ளது. இதனால், மக்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கே செல்லவேண்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இனவாதிகள் மேடையில் அஷ்ரப் மனைவி; மிகவும் மனவேதனைக்குரிய விடயம்!

## அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு

(கொழும்பு)

சமாதானத்தை முன்னெடுக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், பிரபாகரனும் முயற்சிக்கும் வேளையில் - ஜனாதிபதி சந்திரிகாவும், எதிர்க்கட்சியினரும் இனவாதக் குழுக்களான ஜே.வி.பி, சிஹல உறுமய போன்றனவும் சமாதானத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இவ்வாறு வேல்ட் விஷன் அமைப்பு ஏற்பாட்டில் விநாயகபுரம் - திருக்கோவிலில் நடைபெற்ற சமாதானப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றிய அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு தெரிவித்தார்.

மேலும் அவர் தனது உரையில் - சிலர் மற்றவர்களைத் துன்புறுத்தி இன்பம் காண்பதில் மகிழ்ச்சிடைகின்றனர். இதனையே இன்றைய எதிர்க்கட்சி செய்கிறது.

அஷ்ரப்பின் மனைவியான ஃபேரியல் அஷ்ரப் - இனவாதிகளின் கூட்டங்களில் கலந்துகொண்டு தமிழர்களுக்கு எதிரான உணர்வலைகளை வெளிப்படுத்துவது மிகவும் மனவேதனைக்குரிய விடயமாகும்.

இன்று புலிகள் பேச்சுக்களிலிருந்து ஒதுங்கியது எதிர்பார்க்கப்பட்டதும், வரவேற்கப்பட வேண்டியதுமாகும். ஆறு சுற்றுப் பேச்சுகள் வெளிநாடுகளில் நடந்தபோது, அரசினால் பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டன.

ஆனால், எதுவும் செயற்பாட்டிற்கும், நடைமுறைக்கும் வரவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒருவருட காலமாகியும் அது இதுவரைக்கும் பூரணமாக நடைமுறைப் படுத்தப்படவில்லை. குறிப்பாக, தமிழ்மக்களின் மீள்குடியேற்றம் நடைபெறவில்லை.

பொது மக்களின் வீடுகளிலிருந்தும், பொது இடங்களிலிருந்தும் - இராணுவ முகாம்கள் அகற்றப்படவில்லை. இராணுவ, விசேட அதிரடிப் படைகளின் அச்சுறுத்தல் நீங்கவில்லை. பேசப்பட்ட விடயங்களில் பத்து வீதம்கூட நடைமுறைப்படுத்தப் படவில்லை.

ஆனால், அரசு நிதிசேகரிப்பு விடயத்திலேயே கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டு வருகின்றது. அமெரிக்காவுக்குப் புலிகள் செல்லமுடியாது என்பதை அறிந்தும், வட-கிழக்குப் புனர்வாழ்வு, மீள்கட்டமைப்பு நிதி வழங்குவதற்கான முன்னோடி மாநாட்டை அமெரிக்காவில் நடத்தியமை, இலங்கை அரசு - தமிழர்களின் ஏகபிரதிநிதிகளான புலிகளுக்கும், தமிழ்மக்களுக்கும் செய்த நம்பிக்கைத் துரோகமாகும். இவற்றிற்கு எல்லாம் தக்க சாட்டையடி கொடுக்கவே புலிகள் பேச்சுக்களுக்குத் தற்காலிக ஓய்வுகொடுத்தனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆலயங்களுக்கு இனிமேல் பொருட்களே வழங்கப்படும்

### அமைச்சர் மகேஸ்வரன் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இதுவரை இந்துகலாசார அமைச்சினால் கோயில்களுக்கு வழங்கப்பட்டு வந்த, உதவித்தொகை - இனிவரும் காலங்களில் பொருட்களாகவே வழங்கப்படுமென இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதுவரை ஆலங்களுக்குப் பெரும்பாலும் காசோலைகளே வழங்கப்பட்டு வந்தன. வங்கிகளில் வைப்புச்செய்யப்படும் காசோலைகள் பயன்படுத்தப்படாதுள்ளமையால், இனிமேல் பொருட்களாகவே உதவி வழங்கப்படவுள்ளது.

தற்போது புனரமைப்பு வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆலயங்களுக்கும், பாதிவேலை முடிந்தபின் எஞ்சிய வேலைகளுக்கு உதவிப்பொருட்களே வழங்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாவற்குழிப் பிரதேசத்தில் கண்ணிகள் அகற்றப்படுகிறது

(தென்மராட்சி)

தென்மராட்சி - நாவற்குழிப் பிரதேசத்தில் 'ஹலோ டிரஸ்ட' கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் வெடிபொருட்களை அகற்றி வருகின்றது.

கண்டி வீதிக்கு அருகில் இராணுவத்தினரால் கைவிடப்பட்ட காவலரண்கள் மற்றும் வயல்வெளிகள், காணிகள் போன்ற இடங்களில் கடந்த காலங்களில் விதைக்கப்பட்ட மிதிவெடிகள், கண்ணிவெடிகளை இந்நிறுவனம் அகற்றி வருகின்றது.

நுணாவில் பகுதியிலும் சில இடங்களில் இந்நிறுவனம் கடந்த மாதம் கண்ணிவெடிகளை அகற்றியது.

இதேவேளை, கல்வயல், மட்டுவில் பகுதிகளில் குடியிருப்புகளை அண்டிய சில இடங்களில் மிதிவெடி அபாய பலகை பொறிக்கப்பட்டு, ஒரு வருடத்திற்கு மேலாகியும் இதுவரை கண்ணிவெடிகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# புலிகளின் பின்னால் தமிழ்த் தேசம்; வெளிப்படுத்த மே நாளில் கூடுவோம்!

## மாவை சேனாதிராசா எம்.பி. அழைப்பு

தமிழ்தேசம் தமிழீழ விடுதலைப் புலிகளின் பின்னால் ஒன்றுபட்டு உறுதியுடன் நிற்கிறது என்பதை வெளிப்படுத்துவதற்கு -

தமிழ்த்தேசிய இனத்தின் கூட்டு மேதின அணிவகுப்பில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அழைப்பு விடுத்துள்ளார்.

மாவை சேனாதிராசா வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

'மே' முதலாம் நாள் அமெரிக்க நாட்டில் தொழிலாளர் வர்க்கம் பெற்ற வெற்றியைக் கொண்டாடுகின்ற நாள். மே நாள் விழா ஒரு நூற்றாண்டுக்கு மேலாகக் கொண்டாடப்படுகிறது.

தொழிலாள வர்க்கத்தின் வெற்றி விழா - விவசாயிகள் முதல் அனைத்து வர்க்க உழைப்பாளர்களினதும் உரிமைகளுக்குக் குரல் கொடுப்பதற்கும், பெற்ற உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், வலிமை சேர்க்க நடத்தப்படும் போராட்டமாகவும் கருதப்படுகிறது.

சுதந்திரம் பெற்ற நாடுகளில் உழைப்பாளர்களின் உரிமைக் குரலை வெளிப்படுத்தும் அதே வேளை, விடுதலைக்குப் போராடும் மக்களின் - அரசியல் விடுதலைக்கும், மக்கள் சக்தியின் வலிமையை வெளிக்காட்டும் போர்க்குரலாகவும் அது வெளிப்படுத்தப்படுகிறது.

இலங்கையில் தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டமே மேலோங்கி நிற்கிறது.

தமிழ்த்தேசிய இனத்தின் ஆட்சி உரிமை பறிக்கப்பட்டு, ஜனநாயகப் போராட்டங்கள் ஆயுதமுனையில் மாறிமாறிவந்த அரசுகளால் அடக்கி ஒடுக்கப்பட்டதனால், கடந்த 20 ஆண்டுகளில் ஆயுதப் போராட்டம் மேலோங்கி நிற்கிறது.

இராணுவ நடவடிக்கைகளினால் தமிழ்த் தேசிய விடுதலைப் போரை அடக்க முடியாதநிலையில், சிங்களப்பேரினவாத அரசுகள் பொருளாதார நிலையிலும் பாரிய தோல்விகளைச் சந்தித்து வந்துள்ளன.

அதனால் - தொழிலாளர், உழைப்பாளர் உரிமைப் போராட்டங்கள் ஆயுத முனையில் அடக்கப்பட்டன. அத்துடன், உலகமயமாக்கல், சந்தைப் பொருளாதாரமெனும் புதிய பொருளாதாரக் கொள்கைகளினாலும் மக்களின் வாழ்க்கைத் தரமும், உழைக்கும் வர்க்கத்தின் நலன்களும் சுரண்டப்பட்டு வருகின்றது.

எனவே, தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலையை மையமாகக் கொண்டுதான் உழைக்கும் மக்களின் உரிமைகளும் நிலைநாட்டப்படமுடியும் என்பது தெளிவாகும்.

இலங்கையில் பேரினவாத அரசுகளின் தமிழ்த்தேசத்திற்கெதிரான இராணுவ நடவடிக்கைகளினால், தமிழ்த்தேசத்தின் பொருளாதாரம் அழிக்கப்பட்டது. அது மட்டுமல்ல, தமிழ்த்தேசிய இன மக்களுடன் குடியிருப்புக்களும் அழிக்கப்பட்டுள்ளன.

தமிழ்த்தேச மக்களின் குடியிருப்பு, வேளாண்மை, கடற்பிரதேசங்கள் - உயர் பாதுகாப்பு வலயங்களென இராணுவத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டு ஜனநாயக, மனித அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, இயல்பு வாழ்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் அகதி வாழ்க்கையினால் தமிழ்த்தேசியம் அழிக்கப்படுகிறது.

கடந்த ஓராண்டில் போர் நிறுத்தப்பட்டு, அரசியற்தீர்வை எட்டு



வதற்கும், இயல்பு வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்குமான சர்வதேச, உள்ளூர் முயற்சிகள் சமாதானச் சூழலைத் தோற்றுவித்தது. எனினும் - பேச்சுவார்த்தை மேசையில் சிங்கள அரசுத் தரப்பும், தமிழத் தரப்பும் சமபலம் பேணப்படுவதற்குப் பதிலாக, நூற்றுக்கு நூறு வீதம் சிங்களப் பேரினவாத அரசியல் இலக்குடைய இராணுவம் மேலும் கட்டியெழுப்பப்படுகிறது.

இதன்மூலம் தமிழ்த்தேசிய இனத்தின் ஜனநாயக மற்றும் ஆயுத பலத்தைப் பலவீனப்படுத்த முயற்சிக்கப்படுகிறது.

இதனால், அரசியற்தீர்வு பின் தள்ளப்படுகிறது. தென்னிலங்கையில் சிங்கள மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசித்துக்கொண்டு பொருளாதாரத்துறை, கல்வி, மனிதவள மேம்பாடுகளில் முன்னேற -

தமிழ்த்தேசிய இனம் அனைத்துத் துறையிலும் வீழ்ச்சியடையும் சூழ்நிலை ஏற்படுகிறது. மக்களின் தேவைகளும், எதிர்பார்ப்புக்களும் மறுக்கப்படுகின்றது.

இச்சூழ்நிலையில் வல்லாண்மை நாடுகளின் வரம்பற்ற தலையீடுகள் தமிழ்த்தேசத்தின் விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தி விடும் ஐயம் ஏற்படுகிறது.

எனவே, தமிழ்த்தேச மக்கள் தமது ஆட்சியுரிமை, தொழில், விவசாயம் மற்றும் உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளை வென்றெடுக்க ஒன்றுபடவேண்டியது முன்னரைவிட அவசியமாகிவிட்டது.

இதன் அடிப்படையில் - இம்மே நாள் விழாவிலும் தமிழ்த்தேசம்-தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒன்றுபட்டு உறுதியுடன் நிற்கிறது என்பதையும் -

வேண்டுமானால் ஜனநாயக வழிகளிலும் போராட்ட அணி திரண்டுள்ளது என்பதையும் வெளிப்படுத்த அனைவரும் தமிழ்த்தேசிய இனத்தின் கூட்டு மே நாள் அணிவகுப்பில் பங்குகொள்ளவேண்டுமென அழைக்கின்றோம் -

என இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பம் செய்யலாம்!

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் 2003 ஆம் ஆண்டுக்கான கலாபூஷணம் விருது வழங்குவதற்காக 60 வயதுக்கு மேற்பட்ட தமிழ்க் கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு வாழ் கலைஞர்களுக்கென - யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு விண்ணப்பப்படிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மேலும் வடக்கு-கிழக்கிலுள்ள கலைஞர்கள் தத்தமது அரச அதிபர்களைச் சந்தித்து, விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று அவர்கள் ஊடாகவே அனுப்பி வைத்தல்வேண்டும்.

இந்த விண்ணப்பப்படிவங்கள் யாவும் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன், இந்து சமய கலாசார அலுவல்கள திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

(100)

# எழுதுவினைஞர் பதவியுயர்வுப் பரீட்சை முடிவு வெளியிடப்படவில்லை என புகார்!

கடந்த வருடம் வடக்கு-கிழக்கு மாகாணசபையால் தரம் "ஆ" இல் உள்ள எழுதுநர்களைத் தரம் "அ" இற்கு பதவி உயர்த்துவதற்காக நடததப்பட்ட பரீட்சை முடிவுகள் இது வரை வெளியிடப்படவில்லையெனக் கூறப்படுகிறது.

இது குறித்து வடக்கு-கிழக்கு மாகாணசபைக்குள் அடங்கும் திணைக்களங்கள், உள்ளூராட்சி அதிகாரசபைகளைச் சார்ந்த எழுதுநர்கள் - அகில இலங்கை உள்ளூராட்சி நிர்வாக சேவைகள் தொழிற்சங்க ஒருங்கிணைப்புச்சபையிடம் முறைப்பாடு செய்துள்ளதாக அச்சபையின் யாழ். மாவட்ட கிளைத் தலைவர் செ.சந்திரகுமார் தெரிவித்தார்.

உள்ளூராட்சி ஒருங்கிணைப்புச் சபை, சிறு பணியாளர்சபை என்ற பெயரில் அண்மையில் செயற்பட ஆரம்பித்தது. இப்போது அகில இலங்கை உள்ளூராட்சி சேவைகள் தொழிற்சங்க ஒருங்கிணைப்புச் சபையாக பெயர் மாற்றப்பட்டு இயங்க ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சங்கத்தின் செயற்பாடுகள் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## வைகாசி ஒன்றில் வைகறைக்காய் விழிப்போம்

செங்கதிரோன் கிழக்கினிலே கிளைபரப்பி எழுவான்
செகமெங்கும் விவசாயி முகம் விழித்து நிமிர்வான்
பொங்கியெழும் நெஞ்சுடனே பன்னிருமணி நேரமதாய்
புயலாக சுழன்றாலும் வாழ்வினிலே உயர்வில்லை
தங்கமான கரங்களிலே ஏந்தியநற் செங்கொடிகள்
தத்துவமே தொழிலாளர் வர்க்கமது மேதினமாம்
எங்குமே உழைக்குமெம் பாட்டாளியின் விடிவிற்காய்
இனறே நாம் இணைவோமே உரிமைக்காய் உழைப்போமே.

அல்வையூர் கே.ஆர்.திருத்துவராஜா

## கைக்குண்டுத் தாக்குதலில் வெளிநாட்டவர் காயம்!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் அறுகம்பை என்ற இடத்தில் அமைந்துள்ள உல்லாச விடுதி ஒன்றின் மீது கைக்குண்டுத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

இத்தாக்குதலின்போது உல்லாச விடுதியில் தங்கியிருந்த வெளிநாட்டவர் நான்கு பேர் காயமடைந்தனர்.

காயமடைந்த நால்வரும் அம்பாறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## எங்கே போகிறோம்...?

நேசன்

# நமது நகைச்சுவை உணர்வும் சிரிப்பின் விலையும்!

மனித இயல்பின் பெருமைப்படத்தக்க பல தன்மைகளில் 'சிரிப்பு' முதன்மையானது என்றே கூறிவிடலாம். சந்தோஷத்தின் வெளிப்பாடாக நம்மிடம் தோன்றுகின்ற சிரிப்பு ஒரு நல்ல பண்புதான். புன்னகையின் பெறுமதி பற்றி, சிரிப்பின் அருமை பற்றிப் பல அறிஞர்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். 'Dale Carnegie' என்னும் ஒரு சிந்தனையாளர் தனது நூலொன்றில் "சிரிக்கத் தெரியாதவர்கள் எத்தனை பணக்காரர்கள் ஆனாலும் வறியவர்கள்தான்- சிரிக்கத் தெரிந்தோர் எவ்வளவு வறியோரானாலும் புன்னகை எனும் பெருஞ் செல்வத்தையுடைய செல்வந்தராவார்" என்கின்றார்.

மனசு நிறைந்து புன்னகை செய்கிறபோது - அந்தப் புன்னகையின் அழகு, அதிலிருக்கிற உயிர், அதைப் பெற்றுக்கொள்கிற மனசுக்கும் தாவிவிடுகிறது. சிரிப்பும், சநதோஷமுமாக இருக்கிற ஒருவர் அந்தச் சூழலையே மாற்றியும் விடுகிறார்.

சாதாரணமாக அறிந்த ஒருவரை எதிர்கொள்கிறபோது, அவருக்கான எமது முதற் தருகையாக எமது புன்னகை இருக்கவேண்டும். அது நாம் அவருக்குத் தருகிற மரியாதையுமாகும்.

நோர்வேயில் வாழ்கிற நண்பர் ஒருவர் கூறினார் - நோர்வேப் பிரஜைகள் யாரை எதிர்ப்பட்டாலும் ஒரு மரியாதை கலந்த புன்னகையோடு தான் கடந்து போவார்களாம். நல்ல ஒரு பண்பல்லவா அது? தெரியாதவர்களைப் பார்த்து எப்படிப் புன்னகைப்பது என்கிறீர்களா?

தற்செயலாக யாராவது புன்னகைத்தால்கூட, யார் இவர்? இவரை எனக்குத் தெரியாதே..... என்று யோசித்துக்கொண்டே விலகிப்போகிறவர்களாகத்தான் நாம் இருக்கிறோம்.

சிலசமயங்களில் அப்படிச் சிரிப்பதுகூட ஏதோ ஒரு இலாபத்தை எதிர் நோக்கிய செயற்பாடாகத்தான் எமக்குத் தெரியும்.

அப்படியான ஒரு "பார்வை" நமக்கெல்லாம் வாய்த்துப் போயிருக்கிறது.

எதிராளி எவ்வளவு கடுகடுப்பாக இருந்தாலும்- எமது மாறாத புன்னகை, சந்தோஷமான முகபாவம் கொஞ்சம் கொஞ்சமாய் அவரையும் மாற்றிவிடும் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். புன்னகையோடு நாம் எதை அணுகினாலும் ஒரு நல்ல எதிர்விளைவு கிடைத்தேதீரும். குறைந்தது எதிராளியின் "Tension" நம்மைத் தொற்றிவிடாமல் பாதுகாத்துக் கொள்ளவாவது அது பயன்படும். ஆரோக்கியமான மனோநிலையின் வெளிப்பாடாக இந்தப் புன்னகை திகழ்வதை நாம் பல சந்தர்ப்பங்களில் அவதானிக்கலாம். நம் ஒவ்வொருவரதும் அடிப்படையான தேவையாக எப்போதும் இருப்பது ஒரு தளர்வான, சகஜமான மனோநிலைதான். அதுதான் எதையும் நாம் உள்வாங்கவும், சிந்திக்கவும், முடிவெடுக்கவும் வசதியான மனோநிலை. இதையெல்லாம் நாம் பெரிதாகக் கணக்கிலெடுப்பதில்லை. சாதாரணமான சின்னச்சின்ன விஷயங்களாக இவற்றை நாம் எண்ணிவிடுகிறோம். இதனால், சங்கடங்களுக்கு உள்ளாவதும் நாங்கள் தான்.

இயல்பான புன்னகை, சிரித்த முகம், சந்தோஷமான மனோநிலை, இன்சொல் பேசுதல் இவையெல்லாம் நலம் தரும் நல்லியல்புகள்தான். இவற்றை உடையவர்களாக இருப்பதால் நாம் மாத்திரமல்லாமல், அடுத்தவர்களும் சந்தோஷமாக இருக்க நாம் வழி செய்கிறோம், சூழ்நிலையின் இறுக்கத்தைத் தளர்த்துகிறோம். அடுத்தவர்களிடம் ஒரு சிறு சந்தோஷத்தைத் தோற்றுவித்து, அவர்களின் மனங்களை இலேசாக்குகிறோம். இதன்மூலம் அவர்களின் எதிர்வினைகளும் இயல்பானவைகளாக அமைய வழிசெய்து கொள்கிறோம். கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் இது ஒன்றும் கஷ்டமான காரியமல்ல. இயல்பானதும், மிகஇலகுவானதுமான காரியந்தான் இதெல்லாம். ஆனாலும், நாம் அவசரப்பட்டுக் கொட்டிக் கவிழ்த்துவிட்டுப் பின்னர் கழிவிரக்கப்படுபவர்களாக ஆகிப்போகிறோம்.

அன்றாட வாழ்வில் இயல்பாக இருக்கும் ஒரு வழிமுறையாக இந்தப் புன்னகை விளங்கும் அதேசமயம், நமக்கு நகைச்சுவை உணர்வு இருக்க வேண்டும் என்ற ஆர்வம், சிரிக்க வைப்பதில் இருக்கின்ற எமது உள்ளார்ந்த விருப்பு, இன்னொரு வகையானதாக இருக்கிறது. அவ்வாறான நகைச்சுவை உணர்வும் மனிதனுக்குத் தேவையான ஒன்றுதான் என்பது உளவியலாளர்கள் வலியுறுத்தும் ஒரு விஷயம்தான்.

சிரிப்பதும், சிரிக்க வைப்பதும் சந்தோஷந்தான். ஆனால் - எதற்குச் சிரிக்கிறோம், எவ்வாறு சிரிக்கவைக்கிறோம் என்கின்ற விடயங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவையாக இருக்கின்றன.

நண்பர்களோடுகூடிப் பேசிக்கொண்டிருக்கும் எமக்குச் சிரிப்பூட்ட வேண்டும் என்கின்ற ஆர்வம் தோன்றுகிறது. அந்தச் சூழலுக்குப் பொருத்தமாய் ஒரு சிரிப்புக்குரிய கருத்தொன்றைச் சொல்ல விழைகிறோம். எமது கருத்து உடனடியாக நண்பர்களைச் சிரிக்க வைப்பது சரிதான். அது யாரையாவது நோக வைக்குமா, மனதைப் புண்படுத்துமா என்பது பற்றி நாம் பல சந்தர்ப்பங்களில் யோசிப்பதேயில்லை. அளவுக்கு மீறிய பருமனாக உள்ள ஒருவரை, காது கேளாத ஒருவரை நாம் மையமாக வைத்து ஒரு Joke அடிப்பது சகஜம் என்று நினைக்கிறோம். அதனைக் கேட்கின்ற அந்த நபர் உள்ளூரத் தனது குறைபாட்டைக் குறித்து 'மனவலி' உடையவராக இருப்பார் என்று நாம் ஏன் சிந்திப்பதில்லை. சமயோசிதமாக அவரும் சேர்ந்தே ஒத்துச் சிரித்துச் சமாளித்துக் கொண்டாலும், அவரது மென் உணர்வு காயப்படுமே என்று ஏன் நாம் சிந்திப்பதில்லை.

இதெல்லாம் மனிதாபிமானத்தோடு தொடர்புடைய உணர்வுகள். அடுத்தவரின் குறைபாடு எமக்குச் சிரிப்பூட்டுகிறது என்றாலே எமது மனோநிலை பண்படையாமல் இருக்கிறது. நாம் முழுமையாக விருத்தி பெறாத மனப்பண்பை உடையோராக இருக்கிறோம் என்பது பொருள்.

துரதிர்ஷ்டவசமாக எமது இளைய சமுதாயத்தினரிடம் இந்த இயல்பு இப்போது அதிகரித்து விட்டமையைப் பலரும் அவதானித்திருப்பார்கள். இதற்கு ஒரு காரணம் தென்னிந்தியத் திரைப்பட நகைச்சுவைப் போக்குகள்தான்.

பலவீனமான ஏதோ ஒரு வகையில் குறைபாடுள்ள ஒருவனை "நக்கல்" பண்ணுவது ஒரு நகைச்சுவை முறையாக விருத்தியடைந்து வருகிறது.

கவுண்டமணி - செந்திலை இப்படிக் கடிகடி என்று கடிப்பதை ரசிரசி என்று ரசித்துச் சிரிசிரி என்று சிரிக்கின்ற "நம்மை" என்னென்பது?

"சொட்டைத்தலையா, ஜொள்ளு வாயா" என்று விளிப்பதும், அடிஅடியென்று அடிப்பதும் சிரிப்பூட்டலாம்! பாவம் ரசிகப் பெருமக்கள்.

இதுபோலவே மனைவி- கணவனுக்கு அடிப்பது, அல்லது கணவன் மனைவியை மட்டந்தட்டிப் பேசுவது ஒரு நகைச்சுவை அம்சமாக இருப்பதையும் நாம் பார்த்து வருகிறோம். இதைவிட வேறு வகையில் "நகைச்சுவை" பேச வழியில்லையா?

இது வளரும் குழந்தைகளை எங்கே இட்டுச்செல்லும் என்று நினைக்கிறீர்கள்?

*மீண்டும் சந்திப்போம்.......*

# வடக்கு - கிழக்கின் பொருளாதார அபிவிருத்தியில் விடுதலைப் புலிகளை புறந்தள்ளும் திட்டம் இல்லை

## பிரதமர் ரணில் அன்ரன் பாலசிங்கத்துக்கு கடிதம்

**நோர்வே அனுசரணையாளர்களால் நேற்று கிளிநொச்சியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையகத்திடம் கையளிக்கப்பட்ட கடிதத்தின் பிரதியை இங்கு தருகின்றோம்.**



அன்பார்ந்த கலாநிதி பாலசிங்கம் அவர்கட்கு,

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் சமாதான முன்னெடுப்பில் எழுந்துள்ள சிக்கலான சில விடயங்கள் தொடர்பில் தங்கள் அமைப்பின் கவலையைத் தெரிவித்துத் தாங்கள் எழுதிய ஏப்ரல் 21 ஆம் திகதிய கடிதத்திற்குப் பதிலளித்து எழுதிய 2003 ஏப்ரல் 22 ஆம் திகதிய எனது கடிதத்திற்கு மேலதிகமாக நான் இதனை எழுதுகிறேன்.

இரு தரப்பாரும் காட்டிய நேர்மை மற்றும் உறுதிப்பாட்டின் விளைவாக 14 மாத காலத்தில் யுத்த நிறுத்த உடன்படிக்கை வலுப்படுத்தப்பட்டது என்பதிலும், நாடு முழுவதிலும் சமாதானத்தையும், அபிவிருத்தியையும் நோக்கி குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதிலும் என்னுடைய முழுமையான உடன்பாட்டை நான் ஆரம்பத்திலேயே தெரிவிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக -

❖ யுத்த நிறுத்தம் 14 மாத காலமாகச் செயற்பாட்டில் உள்ளது. பொதுமக்கள் மற்றும் போரில் ஈடுபடுபவர்கள் நாளாந்தம் இறக்கின்ற மற்றும் அங்கவீனர்களாக்கப்படுகின்ற நிலை இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

❖ இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் நடைமுறைகள் பலப்படுத்தப்பட்டதுடன், செயற்பாடுகளும் பரப்பெல்லைகளும் விரிவுபடுத்தப்பட்டன. முன்னைய நிலைமையின் கீழ் மோதல்களுக்கு வழிவகுத்திருக்கக் கூடிய நெருக்கடியான நிலைமைகள் தணிக்கப்பட்டு தீர்வு காணப்பட்டன.

❖ இராணுவம் நிலைகொண்டிருந்த வழிபாட்டுத் தலங்களும், பாடசாலைகளும் கையளிக்கப்பட்டன.

❖ அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் தீர்மானங்களை எடுப்பதற்காக இரு தரப்பினரும் சமமான பங்களிப்புள்ள 'சிறான்' என்ற நிறுவனத்தை நிறுவின.

❖ அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கூட்டாக நிதி வழங்குநர்களை அணுகியதன் மூலம், நிதிசார் செயற்பாடுகளுக்காக வடக்கு-கிழக்கு புனரமைப்பு நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

❖ முஸ்லிம்கள் தொடர்பான சில விடயங்கள் கவனத்திற்கொள்ளப்பட்டன.

❖ இரு தரப்பினராலும் சமஷ்டி மற்றும் அரசாங்க கட்டமைப்புக்களைப் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

❖ பால் நிலை விடயங்களுக்கான கூட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

❖ இரு தரப்பினருக்குமிடையே செயற்பாட்டு மட்டத்தில் ஆக்கபூர்வமான செயற்பாட்டு உறவுகள் ஏற்படுத்தப்பட்டன.

❖ வடக்கு - கிழக்கில் மனிதாபிமான மற்றும் புனரமைப்பு பணிகளுக்காக இருபக்க மற்றும் பலபக்க சர்வதேச உதவி வழங்குநர்கள் ஏற்கனவே குறிப்பிடத்தக்களவு நிதியினை (30 மில்லியன் அமெரிக்க டொலரிலும் அதிகமாக) வழங்கியுள்ளனர்.

எல்லா விடயங்களிலும் ஓர் உடன்பாட்டைக்காண இயலாதுள்ளபோதிலும் ஒத்து ஒத்துச் செயற்படுவதென்ற எமது கூட்டுத் தீர்மானம், சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை வென்றுள்ளதோடு புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அவை பங்குபற்றுவதற்கும் வழிவகுத்துள்ளது. ஆகவே 14 மாதகாலச் சமாதானமானது, எமது மக்களுக்கு உறுதியான நம்பிக்கையையும் முன்னேற்றத்தையும் அளித்துள்ளது.

தாங்கள் குறிப்பிட்டுள்ளவாறு 'வேதனைமிக்க முடிவை' எடுப்பதற்குத் தங்களது அமைப்பை இட்டுச்சென்றதாகத் தோன்றும் பலவேறு காரணங்களை ஒவ்வொன்றாக எடுத்துநோக்க விரும்புகிறேன்.

### வொஷிங்ரன் முன்னோடிக் கருத்தரங்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் சேர்க்கப்படாமை

தாங்கள் அறிந்திருக்கக்கூடியவாறு ஜப்பானிய அரசாங்கம் ரோக்கியோ மாநாட்டுக்கு முன்னதாக வொஷிங்ரன், பிரஸல்ஸ், ஒஸ்லோ ஆகிய இடங்களில் முன்னோடிக் கருத்தரங்குகளை நடாத்த யோசனை கூறியது. பின்னர், கடந்த நவம்பரில் நடைபெற்ற ஒஸ்லோ கூட்டம் இந்நோக்கத்தை அநேகமாக நிறைவேற்றிவிட்ட காரணத்தால் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தாமல் விடுவது என நோர்வே அரசாங்கம் கருதியது. அதன்பின் பிரதானமாக - ஈராக் நெருக்கடியுடன் தொடர்புடைய பல்வேறுபட்ட திட்ட ஏற்பாட்டுக் காரணங்களால் ஐரோப்பாவில் கூட்டத்தை நடாத்தும் முடிவு மாற்றப்பட்டதுடன், மே மாதத்தில் கொழும்பில் ஒரு முன்னோடிக் கூட்டத்தை நடாத்த உத்தேசிக்கப்பட்டது. ஹக்கோனில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வேற்பாடுகள் ஆராயப்பட்டன.

ஏப்ரல் மாதத்தில் வொஷிங்ரன் கருத்தரங்கை முன்னெடுத்துச் செல்வதற்கு வேறு இரு முக்கியத்துவமுடைய காரணங்கள் இருந்தன. முதலாவதாக, உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் முக்கியமான இளவேனில் கூட்டங்களில் பங்கேற்பதற்குச் சமுகமளிப்பவர்கள் வொஷிங்ரனில் இருப்பார்களென்பதால் கருத்தரங்கிற்கு மிகமுக்கிய உதவி வழங்குநர்கள் சமுகமளிப்பதை இயலச் செய்வது அடுத்த காரணம். உதவி வழங்குநர்கள் ஈராக் போரை அடுத்து எழுந்த நிலைமையின் விளைவாக ஈராக்கின் தேவைகளுக்காக அவர்களின் கவனம் ஈர்க்கப்படுவதற்கு முன்னதாக அவர்களிடமிருந்து இம் முன்னெடுப்பிற்கு ஒப்புதலைப் பெறுவது முக்கியமாக இருந்தமையாகும்.

வொஷிங்ரன் முன்னோடிக் கருத்தரங்கு உறுதியளிக்கும் ஒரு மாநாடல்ல. இக்கருத்தரங்கில் சமுகமளித்த பலபக்க அமைப்புக்கள் அக்கூட்டத்தில் எமது நாட்டுக்கான அவர்களது நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கக் கூடுமாயிருக்கும் தொகையை அறிவித்தன.

ஐக்கிய அமெரிக்காவின் சட்டத்தின்படி இதுவரை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பாக இருப்பதே, இக்கருத்தரங்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் சமுகமளிக்க முடியாமற் போனமைக்கான காரணமாகும். இதில் தமிழீழ விடுதலைப் புலிகளால் பங்கேற்க முடியாமற் போனமைக்காக நான் வருந்துகிறேன். இந்த நிலைமைக்கு அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்ட முடியாது என்பதைத் தாங்கள் ஏற்றுக்கொள்வீர்கள்.

வடக்கு - கிழக்கை மீளக்கட்டியெழுப்புவதில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுவதற்கு அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு இலங்கையின் புனரமைப்பிற்கும், அபிவிருத்திக்கும் உறுதியளிக்கும் மாநாடாக ஜப்பானிய அரசாங்கத்தால் ஒழுங்குசெய்யப்பட்டதே ரோக்கியோ மாநாடாகும். இம்மாநாடு ஜப்பானிய பிரதம அமைச்சரால் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

### யுத்தநிறுத்த உடன்படிக்கையில் விளக்கப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளும் நடைமுறைப்படுத்தப்படாமை

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் நியதிகளை நிறைவேற்றும் கடப்பாடு இரு தரப்பினருக்கும் உண்டு. உடன்படிக்கைக்கு இணங்கி செயற்படுவதில் முன்னேற்றம் காணப்படுகின்ற அதேவேளை, யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குச் செய்ய வேண்டியவை இன்னும் நிறைய உண்டு என்பதில் நான் தங்களுடன் உடன்படுகிறேன்.

இரு தரப்பினரும் அவ்வாறு செய்வதற்குத் தங்களை அர்ப்பணித்துக்கொள்ளவேண்டுமென்பதே எங்கள் கருத்து. இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு இயலுமான அளவிற்கு, எல்லா அம்சங்களிலும் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதை உறுதிப்படுத்துவதற்காக துணைபுரிந்துள்ளதென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. கள நிலைமையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதே இறுதிநோக்கம். ஆயினும், போர் நீண்டகாலமாக நடைபெற்ற காரணத்தினால் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகள் என்பது ஒரு கடினமான வழிமுறையாக உள்ளது. இரு பகுதியினரும் இயல்புநிலைக்கு மீள்வதற்கு எடுக்கும் காலம் பற்றி பொறுமை இழந்தவர்களாக உள்ளனர் என்பதை நான் அறிவேன். முன்னேற்றம் காண்பதற்கு எங்கள் ஒன்றுபட்ட அர்ப்பணிப்பைப் புதுப்பிப்பது அவசியமாகும்.

### உள்நாட்டிலே இடம்பெயர்ந்த இலட்சக்கணக்கான தமிழர்கள் அனுபவிக்கும் துன்பங்களும், 'துயரங்களும்

அரசாங்கமும், தங்கள் அமைப்பும், சர்வதேச சமுதாயமும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் தற்போதைய நிலைமையை இயன்றளவு விரைவாக மாற்றுவதற்கே அதி முன்னுரிமை கொடுத்துள்ளன. நாங்கள் கடந்த பொதுத் தேர்தலின்போது,

(அ) வடக்கு மற்றும் கிழக்கு மக்களினுடைய வாழ்க்கையை இலகுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கும்

(ஆ) போரினால் இடம்பெயர்ந்த மற்றும் ஆதரவற்ற நிலைக்கு ஆளாக்கப்பட்ட மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் உறுதியளித்திருந்தோம். உண்மையிலேயே இவ் விடயங்களில் ஒருவித முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் உலக வங்கியிடமிருந்தும், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தும், குறிப்பிடத்தக்களவு கடன்களை உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்காகப் பெற்றுள்ளது. அதனால் இடம்பெயர்ந்துள்ள மக்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவில் குறைந்துள்ளது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் குடியேறவுள்ள காணிகளில் இருந்து கண்ணிவெடிகளை அகற்றுவது மற்றொரு பிரச்சினையாகும். கண்ணிவெடிகளை அகற்றும் மனிதாபிமானப் பணிக்கு தங்களை அர்ப்பணித்த பல்வேறு சர்வதேச உதவி வழங்குநர்களின் உறுதுணையுடன் நல்ல செயல் விளைவுகளைத் தரும் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தங்களது தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், அதன் கண்ணிவெடி அகற்றுவதற்கான மனிதாபிமானப் பிரிவும் இம் முயற்சியை வன்னிப் பகுதியில் ஆற்றிவரும் பணி பெரிதும் பாராட்டத்தக்கது.

உண்மையிலேயே மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக செய்யவேண்டியவை இன்னும் மிக அதிகமாக உள்ளன. 20 வருட காலப் போரின் விளைவாக அரசாங்க நிர்வாகக் கட்டமைப்பு சீரற்றுள்ளதனால் இவற்றை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதங்கள் இருந்து வந்துள்ளன. இத்தகைய செயற்பாடுகளை செயற்திறன் மிக்கதாக ஆக்குவதற்கும் வலிமை ஊட்டுவதற்கான படிமுறைகள் பற்றியும், போரினால் மிக மோசமாகப் பாதிப்புக்குள்ளான வடபகுதி மாவட்டங்களின் நிர்வாகத்திற்கான ஒரு செயற்திறன் மிக்க கூட்டிணைப்பு பொறிமுறையை நிறுவுவது பற்றியும் கடந்த சில வாரங்களாக நாங்கள் ஆராய்ந்து வருகிறோம். அரசாங்கம் இம் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தமுன் இவை பற்றித் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு விளங்கும்.

சிறான் அமைப்பினை அதிக செயற்திறன் வாய்ந்ததாக உருவாக்குவது தொடர்பான எங்கள் கருத்துக்களையும் தங்களுக்குத் தெரியப்படுத்தவுள்ளோம். அத்துடன், தேவைப்படுகின்ற மெருகூட்டல்கள் தொடர்பாக ஒரு உடன்பாட்டைக்காண எதிர்பார்த்துள்ளோம். பேனாட் குணதிலகவும் 2003, ஏப்ரல் 28 ஆம் திகதிய கடிதம் மூலம் தமிழ்ச்செல்வனுக்கு தெரியப்படுத்தியிருக்கக்கூடியவாறு அங்கீகரிக்கப்பட்ட 15 நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான நடைமுறைகளை வடிவமைத்துள்ளதோடு, வடக்கு - கிழக்கு புனரமைப்பு நிதியத்திற்கான முறைசார் ஏற்பாடுகளை செய்து முடித்துள்ளோம். இந்தப் பிரச்சினையை நாங்கள் தீர்க்கும்முறை பற்றி, தங்களுக்கு நோர்வே அனுசரணையாளர் விளக்குவார்.

### வடக்கிலுள்ள நகரங்களையும் பொதுமக்களின் குடியிருப்புக்களையும் தன்னகத்தே வைத்துள்ள இராணுவ நிலைகள்

யுத்த நிறுத்தம் செய்யப்பட்டது தொடக்கம், அரசாங்கக் கொள்கையானது பொதுமக்கள் தங்கள் பாரம்பரிய வாழ்க்கையை நடத்துவதற்கு இயலச் செய்யுமுகமாக இயல்பு நிலையை உருவாக்குவதற்கும், அதிகரித்த மீன் உற்பத்தியும், கடந்த நெல் போகத்தின் போது வன்னியில் கிடைத்த ஆகக்கூடிய நெல் விளைச்சலும் இவற்றுக்குத் தெளிவான சான்றுகளாகும்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக தற்போது தேவைப்படுகின்ற கட்டுப்பாடுகளை குறைப்பதற்காக நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ள போதிலும், கடந்த ஓராண்டு காலமாக மக்கள் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மிகவும் தெளிவாகத் தென்படுகின்றன என நான் நம்புகின்றேன். நான் முன்பு குறிப்பிட்டது போன்று போரால் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. பாதுகாப்புச் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தனது 2003 ஏப்ரல் 27 ஆம் திகதிய கடிதம் ஊடாகத் தமிழ்ச்செல்வனுக்கு யாழ்ப்பாண நகரிலுள்ள இரு ஹோட்டேல்களையும், அதனைச் சுற்றியுள்ள வீடுகளையும் இராணுவம் விடுவிக்கும் தீர்மானத்தை அறிவித்துள்ளார். இராணுவத் துருப்புக்கள் குடியமரமுன் வடிவமைக்கப்பட்ட கட்டடங்களுக்கான வழங்கு கட்டளைகள் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ளன. உயர் பாதுகாப்பு வலயங்களின் மீளாய்வு பற்றி ஜெனரல் நம்பியாரால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை ஜனவரி 6 - 9 திகதிகளில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் குறிப்பிட்டவாறு, மீண்டும் பேச்சுவார்த்தைககள் ஆரம்பிக்கும்போது பெற்றுக்கொள்ள முடியும்.

### அரசாங்கத்தின் பாரிய பொருளாதாரக் கொள்கைகளிலும் உபாயங்களிலிருந்தும் வடக்கு - கிழக்கு மக்கள் ஓரங்கட்டப்படுதல்

துரித அபிவிருத்திக்கான நோக்கத்தினையும், உபாயங்களையும் உள்ளடக்கிய "இலங்கையை மீளக்கட்டியெழுப்பும்" ஆவணத்தினைக் கவனமாக வாசிப்போர், மோதல்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பாக எவ்வளவு தூரம் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது என்பதைக் காண்பர்.

"இலங்கையை மீளக்கட்டியெழுப்புதல்" என்பது அரசாங்கத்தின் தேசிய பொருளாதாரக் கொள்கையாகும். அதன் நோக்கம் ஒரு தசாப்தத்திற்கு உயர் பொருளாதார வளர்ச்சியை ஈட்டி நிலைநிறுத்துவதே. இதன் மூலம் -

(அ) வேலை வாய்ப்புக்களின் உருவாக்கம் அத்துடன்,

(ஆ) வடக்கு - கிழக்கின் நீண்ட கால அபிவிருத்தியை ஊக்குவிக்கும் குறிப்பிடத்தக்க திட்டங்களையும், உபாயங்களையும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஆலோசித்துத் தீட்டப்படும் இந்த முன்னெடுப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளை புறந்தள்ளும் எண்ணம் எவ்விதத்திலும் இல்லை.

அரசாங்கத்தினதும், தமிழீழ விடுதலைப் புலிகளினதும் சாதனைகளுள் ஒன்று வடக்கு-கிழக்குப் புனரமைப்புக்கும், புனர்வாழ்வுக்கும் தேவைப்படுவனவற்றை இனங்காண்பதற்கு பல முகவர் தேவைகள் மதிப்பீட்டை தயாரிப்பதில் ஒத்துழைத்துச் செயலாற்ற இயன்றமையாகும். இவ்வறிக்கையை இருசாராரும் ஏற்றுக்கொண்டதும், வடக்கு - கிழக்கை மீளக்கட்டியெழுப்புவதற்கான உத்தியோகபூர்வ திட்ட வடிவமைப்பாக அது அமையும். இத்திட்ட வடிவமைப்பு " இலங்கையை மீளக்கட்டியெழுப்பும்" ஆவணத்தின் ரோக்கியோ உதவிவழங்கும் மாநாட்டில் " இலங்கையை மீளக் கட்டியெழுப்பும்" ஆவணத்திற்கு மேலதிகமாகச் சமர்ப்பிக்கப்படும்.

நாம் எதிர்பார்க்கின்ற வேகம் இல்லாத போதிலும் இவ்வாறான சாதகமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ள வேளையில், இப்போதைக்குப் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதை இடைநிறுத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தீர்மானித்தது மிகவும் துரதிர்ஷ்டவசமாகும்.

எவ்வாறாயினும், பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே அரசியல் தீர்வு காணவேண்டும் என்பதில் தங்களுக்குள்ள அர்ப்பணிப்பை மீளப்புதுப்பித்திருப்பதால் நான் உற்சாகப்பட்டுள்ளதோடு, இதனை மேலும் வலுவூட்டுவதற்கு, தீர்க்கமான இச்சந்தர்ப்பத்தில் தற்போதைய தங்களது நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்து தாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளவாறே குறிப்பிடத்தக்களவு வெற்றிகளுக்குக் காரணமான பங்களிப்பினைத் தொடர்ந்தும் வழங்குவீர்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

இறுதியாக, சமாதான முன்னெடுப்பு எவ்வித தடையுமின்றித் தொடரவேண்டும் என்ற எங்கள் மக்களின் உறுதியான விருப்பத்துக்கு ஏற்ற முழுமையான இணக்கப்பாடாக இது அமையுமென நான் நம்புகின்றேன்.

அன்புடன்
உங்கள் அன்பார்ந்த
ரணில் விக்கிரமசிங்க
இலங்கைப் பிரதம மந்திரி

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# உயர் பாதுகாப்பு வலய முடிவுகள் நம்பியார் அறிக்கையின் பின்பே

## இராணுவத் தலைமையகம் அறிவிப்பு

யாழ். நகர் தவிர்ந்த ஏனைய உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான முடிவுகள், லெப். ஜெனரல் நம்பியாரின் திட்ட அறிக்கை கிடைத்த பின்பே எடுக்கப்படும் என இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, அனைத்து பாதுகாப்பு விடயங்களையும் முழுமையாக மீள்பரிசீலனை செய்தபின்பு, யாழ். நகரின் சுபாஸ் ஹோட்டேலில் இருந்தும் படைமுகாம்களை இடம் மாற்ற முடிவு செய்யப்பட்டதாக இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

பாதுகாப்பைப் பொறுத்தவரையில் புதிதாக படைமுகாம் அமையும் பகுதியில் எந்தவித பிரச்சினையும் இருக்கமாட்டாது என்ற வகையில், யாழ். மாவட்ட கட்டளை அதிகாரி, இராணுவத் தலைமையக பிரதிநிதிகள் உட்பட்ட படை அதிகாரிகள் இம்முடிவை எடுத்த நிலையில் படைமுகாம் இடம்மாற்றப்படுகிறது. அங்கு ஏற்படக்கூடிய எந்தவகை நிலைமைகளையும், அப்படி ஏற்பட்டால் படையினர் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

# வன்னிக்கு நேரில் வருமாறு மிலிந்தவுக்கு பாலா அழைப்பு

அமைச்சர் மிலிந்த மொறகொடவை வன்னிக்கு வருமாறு, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அழைப்பு விடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் தொலைபேசி மூலம் அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் உரையாடியபோதே, இந்த அழைப்பை பாலசிங்கம் விடுத்ததாக மேலும் தெரியவருகிறது.

# பொலிஸாரின் நடவடிக்கை குறித்து மனித உரிமை உபகுழுவில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உபகுழுக் கூட்டம் நேற்று முன்தினம், அதன் யாழ். அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கொழும்பிலிருந்து வருகைதந்த மனித உரிமை ஆணைக்குழுவின் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில், முக்கியமாக பொலிஸாருக்கும் மக்களுக்குமிடையிலான தொடர்பினை மேம்படுத்தல், மனித உரிமைகள் தொடர்பான கல்வி, மக்கள் பொலிஸில் முறைப்பாடு செய்தாலும் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்காமை, பொலிஸார் தமிழ்மொழியிலேயே பதிவுகளை மேற்கொள்ளவேண்டும் என்ற சட்டம் இருந்தபோதிலும் அது நடைமுறைப் படுத்தப்படுவதில்லை, இது தொடர்பாக கொழும்பிலுள்ள மொழி ஆணையாளரிடம் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுத்தல், அத்துடன்- தமிழ் மக்களை விசாரணைகளுக்குட படுத்தும்போது சிங்கள மொழியில் விசாரணை செய்யும் நடைமுறையை மாற்றுதல் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி ஆராயப்பட்டது.

இப்பிரச்சினைகள் தொடர்பாக மிகவிரைவில் உரிய தீர்வு காணப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.(ரா)

# பிரதமர் ரணிலின் பதில் கடிதம் நோர்வே தூதுவர் ஒப்படைத்தார்

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எழுதிய பதில் கடிதத்தின் பிரதியொன்று நேற்று புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனிடம் ஒப்படைக்கப் பட்டது.

நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர், முன்னாள் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் ஆகியோர் இந்தக் கடிதத்தை ஒப்படைத்தனர்.

சிறான் கூட்டம் தொடர்பாக சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேனாட் குணதிலக, விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கு எழுதிய கடிதமும் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

பிரதமரின் பதில் கடிதம், அவரது ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனால் நேற்றுமுன்தினம் காலை நோர்வே தூதரக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஜப்பானிய விசேட தூதுவர் அடுத்த வாரம் வன்னிக்கு

(கொழும்பு)

ஜப்பானின் விசேட தூதுவர் யசுசி அகாஷி, எதிர்வரும் 7 ஆம் திகதி விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடத்தை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாக ஜப்பானியத் தூதரக வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

எதிர்வரும் ஜூன் மாதம் ஜப்பானில் நடைபெறவுள்ள நிதியுதவி மாநாடு தொடர்பாக இச்சந்திப்பின்போது பேசப்படும். இச்சந்திப்பு நடைபெறும் சமயத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வன்னியில் தங்கியிருப்பார் என்றும் ஜப்பானியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சனும் இந்த மாதத்தின் இரண்டாவது வாரத்தில் வன்னி வரவுள்ளார். முன்னர் - இவரின் வன்னி விஜயம், ஈராக் போர் காரணமாகப் பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறான் பிரச்சினைகள் குறித்து கடந்த முறை ஆராய இருந்தோம்

## பேனாட் குணதிலக தமிழ்ச்செல்வனுக்கு கடிதம்

சிறான் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், தடங்கல்களை தற்காலிகமாக நீக்குவது பற்றி கடந்த 25 ஆம்,26 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த கூட்டத்தில் கலந்துரையாட இருந்ததாக - சிறானின் அரச தரப்புக்குழுத் தலைவர் பேனாட் குணதிலக தெரிவித்துள்ளார்.

புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

உலக வங்கி ஏற்பாட்டில் வடக்கு கிழக்கு புனர்வாழ்வு நிதியம் அமைக்கப்படுவதில் ஏற்பட்டிருக்கும் தாமதத்துக்கு அரசாங்கம் பொறுப்பல்ல.

அரசாங்கத்தின் சமாதானச் செயலகம், புனரமைப்பு நிதியம் தொடர்பாகக் கடந்த சில வாரங்களாக உலக வங்கியுடன் தொடர்பு கொண்டு இயலுமான விரைவில் இந்த விவகாரத்தினை தீர்ப்பதற்கு முயற்சித்து வருகிறது என அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஐரோப்பிய யூனியன் கவலை தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களிலிருந்து விடுதலைப் புலிகள் தற்காலிகமாக விலகியது குறித்து, ஐரோப்பிய யூனியன் கவலை தெரிவித்துள்ளது. இருதரப்பும் யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி நடந்து கொள்ள வேண்டும் எனவும் ஐரோப்பிய யூனியன் கேட்டுக்கொண்டுள்ளது.

## அணைத்து...

இலவச போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மே தினக் கூட்டத்தின் இறுதியில் சிறப்புக் கலைநிகழ்ச்சியாக, மட்டக்களப்பு பாடுமீன் இசைக்குழுவினரின் இசைநிகழ்வு இடம்பெறவுள்ளது.

(ரா,சு)

## அமைச்சரவை...

பரிந்துரைகளின் அடிப்படையிலும், நாட்டிற்கு எவ்வித அச்சுறுத்தல்களும் வராது என்ற அடிப்படையிலும் இந்த இராணுவ முகாம்கள் இடம்மாற்றப்படுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி இரண்டு முகாம்களையும் அகற்றுவதற்கான இந்திய இராணுவ நிபுணர் நம்பியாரின் அறிக்கையெதனையும் அரசு எதிர்பார்க்கவில்லை என்றும், அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாகவே நம்பியாரின் அறிக்கை எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தற்பொழுது இடைநிறுத்தியுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கைக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷியும், நோர்வே உதவி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனும் நாளைமறுதினம் பிரதம மந்திரியுடன் விசேட பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக, இலங்கை வரவுள்ளதாகவும் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

தற்போதைய நிலைமைகள் குறித்த முழுமையான அறிக்கையை எதிர்வரும் 6 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் பிரதமர் சமர்ப்பிக்கவுள்ளதாக பீரிஸ் மேலும் தெரிவித்தார்.(01)

## உலக வங்கி பிரதிநிதி...

கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட்டையும், இலங்கைக்கான புதிய நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கரையும் - முன்னாள் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கையும் - சிறான் பணிப்பாளர் இரேனியஸ் செல்வினும், தமிழர் புனர்வாழ்வுக்கழக சர்வதேச இணைப்பாளர் ஜோய் மகேஸ்வரனும் கைலாகுகொடுத்து வரவேற்று, அரசியற்துறை நடுவப்பணியகத்திற்கு அழைத்துச்சென்றனர்.

அரசியற்துறை நடுவப்பணியகத்திற்கு வந்த மேற்படி குழுவினரை, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கைலாகு கொடுத்து வரவேற்றார்.

பேச்சுக்கள் காலை 11.30 மணியளவில் ஆரம்பமாகின. இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சிறான் பணிப்பாளர் செல்வின் இரேனியஸ், தமிழர் புனர்வாழ்வுக் கழக சர்வதேச இணைப்பாளர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது இருதரப்பினரும் வட - கிழக்கு புனர்வாழ்விற்கான சர்வதேச நிதியம் தொடர்பாகவும், சிறானின் செயற்பாடுகள் தொடர்பாகவும், அரசியல்நிலை பற்றியும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

நேற்றைய பேச்சுக்கள் தொடர்பாக கருத்து வெளியிட்ட நோர்வேத் தூதுவர், பேச்சு விபரங்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தாங்கள் எடுத்துக்கூறவிருப்பதாகத் தெரிவித்தார்.

(லி)

## யுவதியை...

இவர்கள் இருவரும் விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டு தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவ்விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்ட யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ்ப்பாணத்தில் இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்திருப்பது தொடர்பாக பாடசாலைகள், சமய அமைப்புக்கள், பல்கலைக்கழகம் மற்றும் பொது அமைப்புக்களிடமிருந்து இவற்றைக் கட்டுப்படுத்தும்படி எமக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது.

இச்சமூகச் சீர்கேடுகளைக் கட்டுப்படுத்தும் அளப்பரிய பொறுப்பு எமக்குண்டு எனக் குறிப்பிட்டார்.

(சு)

## நோர்வே, ஜப்பான்...

ஆகியோரும் அமைச்சர் மிலிந்த மொறகொட மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹாவுடன் இணைந்து மிகமுக்கியமான நான்கு தரப்புப் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

இந்தச் சந்திப்புக்கு பின்னரே அகாஷி மற்றும் ஹெல்கிசன் ஆகியோர் கொழும்புக்கும் பின்னர் வன்னிக்கும் வரவிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஹெல்கிசன், லண்டனில் அன்ரன் பாலசிங்கத்துடனான தனது சந்திப்பை முடித்துக்கொண்டே இந்தியா வரவிருப்பதாகத் தெரியவருகிறது.

**பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை**

கிளிநொச்சி, தீவகம், பருத்தித்துறை ஆகிய சாலைகளுக்கு பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை. சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம், வாகன ஆவணங்களுடன் சனிக்கிழமை (03.05.2003) காலை 10.00 - 11.00 மணிக்குமிடையே அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

நிர்வாக இயக்குநர்.
நமது ஈழநாடு

IIS

**A/L 2003**

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான விசேட கணனிக் கற்கைநெறி

**Diploma in Information Technology**

ஆரம்பமாக இருக்கின்றது.

(மிகக்குறைந்த கட்டணத்தில் 3 மாதகாலப் பயிற்சி நெறி)

(சி - 886)

ஆரம்பம்:
பிரிவு 1 : 25.05.2003
பிரிவு 2 : 28.05.2003
பிரிவு 3 : 14.06.2003
காலை 10.00 மணி

INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)
No. 100, Clock Tower Road, Jaffna.
Tel. 21 222 2831
Branches:
IIS, Nelliyaddy, Karaveddy
IIS, Main Road, Chankanai

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.05.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.